

மலர் 3 NA-3 இதழ் 14

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ஆண்டி

தில்லை வில்லாளன்

அறிஞர். கா. அப்பாத்துரை

விசு. திருநாவுக்கரசு

ச. சீத்தாராம்

வழிப்போக்கன்

கோவை. இளஞ்சேரன்

தமிழரசன்

தமிழ்மணி

ஆசிரியரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஆவணித் திங்கள் 9-ம் நாள்

விலை அணா 5
25—8—49

திருமணம்

மாதிவள் இலேளனில் வாழ்தல் இலேஎனும்
காதல் நெஞ்சக் காந்தமும், நாணத்
திரைக்குட் கிடந்து துடிக்கும் சேயிழை
நெஞ்ச இரும்பும் நெருங்கும்! மணம்பெறும்!

* * *

புணர்ச்சி இன்பம் கருதாப் பூவையின்
துணைப்பாடு கருதும் தூயோன், திருமணச்
சட்டத் தாற்பெறத் தக்க தீநிலே
இருப்பினும் அதனை மேற்கொளல் இல்லே.
அஃது திருமணம் அல்ல ஆதலால்!

* * *

என்தினை வறிந்து தன்செங் காந்தள்
அரும்பு விரற்கிளி அலகு நகத்தால்
நன்று சொறிவாள் என்று கருதி
மணச்சட் டத்தால் மடக்க நினைப்பது
திருந்திவரும் நாட்டுக்குத் தீய எடுத்துக்காட்டு!
மங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவுமணி!


* * *

மலம் மூடத்தான் மலர்பறித் தேனெனில்
குளிர்மலர்ச் சோலே கோவென் றழாதா?

* * *

திருமண மின்றிச் செத்தான் அந்தச்
சில்லிட்ட பிணத்துக்குத் திருமணம் செய்ய
மெல்லிய வாழைக் கன்றைவெட் டுவது
புரோகிதன் புரட்டு நூல்! அதனைத்
திராவிடர் நெருப்பும் தீண்ட நாணுமே!

[மாலேமணி] — புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



இரண்டாண்டு வாழ்வு!

இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெள்ளையர்களிடமிருந்து விடுதலை கிடைத்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்திய அரசினரும் ஆட்சிப் பீடத்திலுள்ள காங்கிரஸ் கட்சியினரும் இவ் 'விடுதலைநாள்' கொண்டாட்டத்தில் கடந்த பத்துநாட்களுக்கு முன் திளைத்திருந்தனர். ஆச்சாரியார், நேரு, படேல் ஆகிய ஆளும் பெரியவர்கள் நாட்டிற்குச் செய்திவிடுத்து 'எதிர்காலம்சிறப்பாக இருக்கும்' என்று தைரியமூட்டினர். நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் அதிகாரிகள் 'மரம் நடும்' வேடிக்கை செய்து காட்டினர். "உணவுப் பிரச்னையைத்தீர்த்துவிடுவோம்" என்று அறிக்கை பின்னறிக்கை வந்தன. தேசியக் கொடியை ஏற்றி வைத்துத் "தாயின் மணிக்கொடி பாரீர்!" என்று அமைச்சர்கள் பாடி மகிழ்ந்தனர். அனைத்திந்திய வானொலி நிலையங்கள் சுதந்தரப் பேச்சுக்கள், சுதந்தரக் கச்சேரிகள், சுதந்தர நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அமர்க்களப்படுத்தின. பத்திரிகைகள் 'சுதந்தர மலர்' வெளியிட்டுப் பூரிப்படைந்தன.

இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து மகிழாதவர்கள் எத்தனையோ கோடிப்பேர் இருந்தார்கள்; அவர்கள்தான் இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள். மாற்றுக் கட்சியினர் என்ற முறையிலோ, அல்லது காங்கிரஸை ஒழித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தினாலோ, அவர்கள் "விடுதலை நாள்" மகிழ்ச்சியில் பங்கு கொள்ளாமலில்லை. காரணம் இருந்தது, அவர்கள் கலந்துகொள்ளாமலிருந்ததற்கு. வெள்ளையர்கள் வெற்றி விழாக் கொண்டாடினார்களே, அப்போது அவ்விழாவில் மந்திரிகளும், கவர்னர்களும், கலக்டர்களும்தான் முக்கியமாகப் பங்கு கொண்டனர். அதுபோன்றே இச் சுதந்தர விழாவும் அதிகாரிகளின் விழாவாக முடிந்ததே தவிர, மக்கள் மனமுவந்த விழாவாக நிகழவில்லை. பத்திரிகைகளில் வந்த செய்திகளைக் கூர்ந்து கவனித்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். ஏன் இந்த விபரீத நிலை? இந்தியருக்கு விடுதலை கிட்டியிருக்கிறது! அதன் இரண்டாண்டு நிறைவு விழா! அவ்விழாவில் இந்திய மக்கள் பூரணமாகக் கலந்து இன்பம் பெறவில்லை. ஏன் இந்த விசித்திர நிலை!

வெள்ளையன் வெளியேற்றம் மகிழ்ச்சி தரும் செய்தி; இந்தியா விடுதலை பெற்றது என்பதும் மகிழ்ச்சிதரும் செய்தியே! ஆனால் விடுதலை பெற்றபின் நாட்டின் நிலை மகிழ்ச்சி தருவதாயில்லை! 'விடுதலை ஆட்சி' வெள்ளையர் ஆட்சி நல

மாம்' என்று கூறிடும் அளவுக்குக் கொடுமை நிறைந்து விளங்கி வருகிறது. ஆகவேதான் 'சுதந்திர தினம்' சுபமங்கள தினமாக நாட்டவருக்குத் தோற்றவில்லை; அக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதில் பொருளிருப்பதாக அவர்கள் கருதமுடியவில்லை.

ஆம். இரண்டாண்டு விடுதலை வாழ்வு அப்படிக்கசந்து போயிருக்கிறது. விடுதலை பெற்றுத் தந்த வீரர்கள் தாம் ஆட்சி செலுத்துகிறார்கள். என்றாலும் ஆட்சிப்போக்கு நாட்டிலுள்ள மக்களைத் திருப்திப்படுத்தும் விதமாய் அமையவில்லை. "விடுதலை வந்தால் வரியின்றி அரசாங்கம் நடத்துவோம்" என்று கூறி ஒட்டுப்பெற்ற வீரர்கள் பதவியிலமர்ந்தவுடன் "வரிக்குப் பின்வரி" என்ற திட்டத்தில் இறங்கிவிட்ட விந்தையை எப்படி நாட்டுமக்கள் மறந்துவிட முடியும்! வரிதான் கூடுகிறதே வாழ்வேனும் வளமடைகிறதா என்றால், அவ்வகையிலும் இல்லை என்று கூறிக்கண்ணீர்விடுமளவுக்குத்தான் பொதுமக்களின்நிலை வந்திருக்கிறது. உணவு, உடை, உறையுள் மனிதனுக்கு மிக முக்கியதேவைகள். இத்தேவைகளில்ஏதும் இந்திய ஆட்சியில்எல்லா மனிதருக்கும் திருப்திகரமாகக் கிடைக்கவில்லை. போர்முடிந்து எத்தனையோ ஆண்டுகள் ஆன பின்னும்,பங்கீட்டு முறை இன்னும் நீடிக்கிறது; இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கநேரிடுமென்றும் ஆட்சியிலுள்ளோர் கூறுகிறார்கள். பங்கீடு வயிற்றை நிரப்பும் வகையில் நடைபெறுகிறதா எனில், அதுவும் அரை வயிற்றை நிறைக்கும் வகைதான் செய்கிறது. உணவுப் பெருக்குத் திட்டங்கள் "ஏட்டுச் சுரைக்காய்" அளவில் நின்றுவிடுகின்றன. உடை நிலைமையும் அப்படி அப்படித்தான். மில் முதலாளிகளின் ஜாலவித்தைகளின் படி ஒருநாள் அசாத்தியமாய்த் துணி தேங்கிக் கிடப்பதாகவும். மற்றொருநாள் கடைகளில் துண்டுத் துணிகூடக் கைவசமில்லை என்பதாகவும் பொதுமக்கள் அறிய முடிகிறதே ஒழியத் திருப்திகரமான வகையில் உடை பொது மக்கட்குக் கிடைப்பதில்லை. மேலும் லட்சியவாதிகளின் 'கதர்' வேறு இடையில் வந்து குட்டையைக் குழப்புகிறது. நகராண்மைக் கழக ஊழியர்களுக்குக் "கதர்" தான் வாங்கித்தரவேண்டுமென்று கட்டளையிடும் நிலையில் அரசாங்கம் நடைபெறுகிறது! உறையுள்பற்றியோ கூறவேண்டியதில்லை. வீடில்லாத் திண்டாட்டத்தின் பயனைக் கவர்னர் ஜெனரல் ஆச்சாரியாரே நன்கு உணர்ந்திருக்கிறார். 'அகதிகள்' டில்லியில் படுத்தும்பாடு மந்திரிகளுக்கு வீட்டுவசதி எத்தனை அவசியம் என்பதை நன்கு புலப்படுத்தப் போதுமானது. மற்றும் நகரங்களில் தெருவில் தூங்குவோர் தொகையைக் கணக்கிடலரிது ஒவ்வொரு இந்தியனும் அவன் வசிக்க ஏற்ற வீடு பெற்றிருக்கிறான் என்று கூறும் நிலை வரும் வரை நாட்டில் அமைதியைக் காணமுடியாது.

இவை தவிர்த்து, கல்விப் பிரச்னை பெரிய தலையிடியாய்க் காட்சியளிக்கிறது. நூற்றுக்குத்தொண்ணூறு பேரைப்படிக்காதவர்களாகவே வைத்துக்கொண்டு "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று பாடுவது வெளிநாட்டார் பார்த்துப் பரிகசிக்கத் தான் உதவும். மேலும் இப் பிரச்னைபற்றிய பேச்சு அதிகமிருக்கிறதே யொழிய உருப்படியான நடவடிக்கைகள் ஒன்றும் நிகழவில்லை. மாநாடுகளும், ஆலோசனைக் கூட்டங்களும் நடந்த வண்ணமிருக்கின்றன. ஆனால் காரியத்தில் அவை உருப்பெறத்

தான்போதுமான பணவசதியோ, கட்டிடவசதியோ ஆசிரியர்கள் வசதியோ கண்ணுற் பார்ப்பதும் அரிதாயிருக்கிறது. இந்நிலையில் மேற்படிப்புவசதிகள் பெரும்பாலோருக்கும்'கனவில்' தான் கிட்ட முடியும் என்றுகூறலாம்.

நாட்டின் பொருள்வளம் எப்படியிருக்கிறதென்று பார்த்தால் .உலகபாங்கில் கடன் பெறும் நிலையிலும் "வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்கிறோம்" என்று விளம்பரம் செய்யும் வகையிலும், ராணுவச் செலவு மிகுந்து, மேலும் மேலும் ஏழைக்கு வரிகூட்டும் படலமாகவும், செல்வருக்கு வரிகுறைக்கும் படலமாகவும் காட்சியளிக்கிறதென்னலாம். "தேசிய மயமாக்குதல் இல்லை-அது பெருந்தொல்லை" என்று எத்தனை உறுதி கொடுத்தாலும் இந்நாட்டு முதலாளிகள் தொழில்துறைகளில் முதலீடு செய்யத் தயக்கம் காட்டுகின்றனர். எனவே உருப்படியான வகையில் தொழில் வளமும சிறக்க வழியில்லை. 'தேசிய மயமாகாது: முதலாளிகளும் அரைகுறை நிலையில் வளர்ப்பார்கள்' என்றால் எப்படித் தொழில் முன்னேற்றம் காண முடியும்? முதலாளிகளைச் 'சரிக்கட்டி'ச் செல்ல எண்ணும் நேரு அரசாட்சியில் தொழில் ஆக்கம் 'குதிரைக் கொம்பாகவே'முடியும்.

தாய்மொழிகட்கு விடுதலை பெருஞ் சிறப்பளிக்கும் என்று எண்ணியவர்களும் ஏமாந்தனர். ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பிடித்துக்கொள்வதை இப்போது கண்ணுற் கண்டு கண்ணீருகுக்கும் நிலைதான் வந்திருக்கிறது. தாய்மொழியிலாட்சி நடைபெறும்என்பதும். தாய்மொழிக்குமுதன்மை என்பதும் நடைமுறையில் கேலிக்கூத்தாக முடிந்திருக்கின்றன. சென்னை ஆட்சியினர் திருச்சி மாவட்டத்தில் 'தமிழில் ஆட்சி' நடத்தக் கட்டளையிட்டனர். ஆனால் அக் கட்டளை காரியத்தில் எவ்வளவு தொலை நிறைவேறுகிறது என்று பார்த்தால், ஆட்சியினர் வெட்கப்படும் அளவுக்குத்தான்! அது போன்றுதான் தாய்மொழி முதன் மொழி என்னும் பள்ளித்திட்டமும்! இந்திக்குவிழாநாள் ஆகவும், தாய்மொழிகட்குத் தொல்லை நாள் ஆகவும் விடுதலைநாள் முடிந்திருக்கிறதையே நாம் காணுகிறோம்.

இரண்டாண்டு விடுதலை ஆட்சி 'விமரிசை'யை இன்னும் விரித்துக்கொண்டே செல்லலாம். மாற்றுக்கட்சியினருக்குள்ள பேச்சுரிமைக்குத் தடை, அவர்கள் பத்திரிகைகட்கு ஜாமீன் கோரிக்கை, அவர்கள் நூல்கள் பறிமுதல், கூட்டங்கட்குத்தடை, மீறினால் தடியடி, சிறைவாழ்வு-இந்நிலைதான் நாட்டுக்குக்கிட்டியிருக்கிறது. தொழிலாளர்நிலையோ சொல்லவேண்டியதில்லை. கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு அவர்களைச் சூறையாடுவது போதாதென்று, அரசாங்கமும் அடக்குமுறை பரிசுகளை அவர்கட்குத் தாராளமாகத் தந்துவருகிறது.

காங்கிரஸ் ஆட்சி இரண்டாண்டுகளில் சாதித்த 'நற்செயல்'களைத்தான் நாம மேலே தீட்டியிருக்கிறோம். இந்த 'நற்பணி' புரிந்தோர் இன்னும் ஆட்சியில் நீடித்திருக்க வேண்டுமாம்! பொதுமக்கள் அவர்கட்குத்தான் ஓட்டுப்போட வேண்டுமாம்! எப்படியிருக்கிறது வேடிக்கை! ஆனால் மக்களுக்குக் காங்கிரஸ் ஆட்சி கசந்துவிட்டதென்பதற்கு இந்த ஆண்டு விடுதலைநாள் கொண்டாட்டமே போதுமான சான்று பகர்வதாகும்!

காலமும் கருத்தும்

அவசர அதிகாரம்

டில்லியில் கூடியுள்ள அரசியல் அமைப்பு மன்றம் அரசியல் திட்டத்தை முடிக்கும் தறுவாயிலிருக்கிறது. அவசர அவசரமாக விதிகள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த விதிகளின் நோக்கத்தை நாம் பார்க்கும்போதெல்லாம் நமக்குத் திடுக்கிடுகிறது. அண்மையில் பல விதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் பயங்கரமானவை. மத்திய சர்க்கார் பலம்பொருந்தியதாய் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தில் மத்திய சர்க்காருக்கும் ஜனாதிபதிக்கும் அதிகாரங்கள் கணக்குவழக்கின்றி வழங்கப்படுகின்றன. நினைத்தால் ஜனாதிபதி சர்வாதிகாரியாக மாறிவிடலாம். மாகாண சட்ட சபைகள் கலைக்கப்பட்டுவிடலாம். ஒருகுடைக்கீழ் ஆட்சி வந்துவிடும். இத்தகைய போக்கு நல்லதல்ல என்று கூற விரும்புகிறோம்.

ஏற்பாடு செய்க

தென்னாட்டில் சாத்தூர், சிவகாசி ஆகிய ஊர்களில் திப்பெட்டித் தொழில் முக்கிய கைத்தொழிலாக நடந்துவருகிறது. ஏறக்குறைய 20 000 பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இத்தொழிற்சாலைகளில் அறுபதுபோலச் சமீபத்தில் மூடப்பட்டு விட்டனவாம். காரணம் 'பொட்டாஸியம் குளோரேட்' என்னும் மருந்து அவர்கட்குப் போதுமான அளவில் கிடைக்காததே! இந்நிலை நீடித்தால் பாக்கியுள்ள தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிடுமாம். இந்திய சர்க்காரின் இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக இச்சரக்கு போதுமான அளவு இந்தியாவுக்கு வரமுடியவில்லை என்பது தெரிகிறது. சென்னை சர்க்கார் இவ்விஷயத்தை உடனே கூர்ந்து கவனித்து ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மலேயா சர்க்கார்

மலேயா சர்க்கார் அடக்குமுறையில் கைதேர்ந்தவர்களாகிவிட்டார்கள். இந்தியாவினின்றும் வெளிவந்த "போர்வாள்" "நேத்தாஜி" பத்திரிகைகளை விற்றதற்காக, அப்பத்திரிகைகளின் விற்பனையாளர்களைத் தண்டித்தார்கள். அபராதமும் சிறைவாசமும் வழங்கினார்கள். இப்போது "தமிழ்நேசன்" என்ற பத்திரிகை, இந்தியப்பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரையைத் திருமபப் பிரசுரித்ததற்காக, ஆசிரியருக்கும் உரிமையாளருக்கும் அபராதம்விதித்திருக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகள் "திராவிடநாடு" "போர்வாள்" முதலியவை, இனி மலேயாவிற்குள் வரவே கூடாதாம்! எப்படிக் கட்டளைகள்! இப்படி எல்லாம் தடுத்துவிடுவதால் மலேயாவில் அமைதி நிலவிவிடும், அத்தனைபேரும் சாந்த சொரூபிகளாகி விடுவர் என்று அவர்கள் எண்ணினால் அது வீண் கனவாகத்தான் முடியுமென்று கூற விரும்புகிறோம்.



சுதந்தர ஆர்வம் இந்திய அரசினருக்கு எப்படி எப்படிப் பொங்குகிறது, பார்த்தீர்களா? புதுத்தபால் தலைகள் வெளியிட்டிருக்கிறார்கள், பாருங்கள். மதச்சார்பற்ற நேரு ஆட்சியில்தான் திரிமூர்த்தி, நடராசர், மகாவிஷ்ணு உருவங்கள் பொறித்த தபால் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. எத்தனை பயபக்தியோடு இக்காரியம் செய்யப்பட்டிருக்கிறது! இப்போது வரவரக் கோயில்களில் சென்று பூஜிக்கும் 'பக்திமான்கள்' சுருங்கி வருகிறார்கள் அல்லவா? ஏது காளாவட்டத்தில் கடவுள்களின் உருவங்களே இந்தப் பக்தர்களின் நினைவினின்றும் மறைந்து விடுமோ என்று பயந்து தபால் தலையிலாவது பொறித்து வைப்போம்; மக்கள் மறக்காமலிருக்கட்டும என்ற நல்லெண்ணம் காரணமாக இந்திய சர்க்கார் செய்துள்ள இந்த அரிய 'சேவை'யைப் பக்தர்கள் பாராட்டுவதுதானே முறை! நாஸ்திகர்கள், இந்துமதம் தவிர்த்த வேற்று மதத்தார் வேண்டுமானால் இத்'தகாச்செயல்' கண்டு அரசினர் மீது ஆத்திரப்படலாம். ஆனால் பக்தர்களுக்கும் இச்செயல் கண்டு கோபம் வருகிறதென்றால் விந்தைதான்! ஒவ்வொரு ஸ்டாம்பும் பெருமான் குடிகொள்ளும் ஒவ்வொரு கோயிலாகக் காட்சியளிப்பதைக்கண்டு மனம்பூரிப்பதற்கு மாறாகப் பக்தன் சினம கொள்ளுகிறான். எல்லாம் காலத்தின் கோலம்! ஏன் அவன் ஆத்திரப் படுகிறான்? நடராசர் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலையிலே தபால் முத்திரைகள் திரும்பத் திரும்பக் குத்தப் படுகிறதாம்! இந்த அவமானத்தை நடராசருக்கு இந்திய சர்க்கார் தேடித்தந்து விட்டார்களாம்! மதச்சம்பிரதாயங்கட்கு மட்டும் இந்த உருவங்களைப் பயன்படுத்த வேண்டுமேயொழியச் சாதாரணக் காரியங்கட்கும் பயன்படுத்துவதால் இத்தகைய 'மானக்கேடு' தான் நேரும என்று அவர் விளக்கம் தருகிறார். இந்திய சர்க்காரின் செயல் பக்தர்களையும் திருப்திப்படுத்தவில்லை; மற்றவர்கட்கும் எரிச்சல் தருவதாயிருக்கிறது! ஏன் இப்படி அதிருப்தியை விலைக்குவாங்கிக் கொள்ளவேண்டும்? கோயிலில் வைக்கவேண்டிய சில வடிவத்தைத் தபால் தலையில் பொறிப்பது பொருத்தமில்லாத செயலென்று இனியேனும் அவர்கள் தெரிந்து கொள்வார்களாக!

"கதர்க் குல்லாய் லஞ்ச ஊழலின் சின்னம்"—இவ்வாறு சொன்னால் கதர்க் குல்லாய் தரித்திருப்பவர்களைத் தவிர மற்றவர்கட்குக்கோபம் நிச்சயமாக வராது! 'கதர்க்குல்லாய்' செய்துவரும் லீலாவினோதங்களைக் கடந்த இரண்டாண்டுகளாகக் கண்ணுற் கண்டும், காதாற் கேட்டும் வரும் அன்பர்கள் இப்பொன்மொழி நூற்றுக்கு நூறு உண்மை என்று உடனே ஆமோதிப்பார்கள். ஏனெனில் அவர்கள் அனுபவசாலிகளல்

லவா? சரத்சந்திர போஸ், கல்கத்தா உபதேர்தலில் காங்கிரஸை மண்ணைக்கவ்வச் செய்தாரல்லவா? அந்த வீரர்தான் இப் பொன்மொழியையும் வீசியிருக்கிறார்! என்ன இருந்தாலும் வங் கம் தந்த சிங்கத்தின் உடன் பிறப்பல்லவா? உண்மை, எத்தனை ரத்னச் சுருக்கமாக அவர் வாய்மொழியாக உதிர்ந்திருக்கிறது என்பதை நாம் எண்ணும்போது மிகவும் வியப்படைகிறோம்.

இச் சமயத்தில்தான் புகார்ப் பரிசீலனை சென்னையில் நடை பெற்று முடிந்திருக்கிறது. ஆந்திரகேசரியும், பிரதமரும் சம்பந் தப்பட்ட புகார்கள் சரிதானா என்று பெரிய ஆராய்ச்சி நடத்தி முடித்திருக்கிறார்கள். இனிப் பிரதமரின் அறிக்கை காங்கிரஸ் கமிட்டிக்குக் கிடைக்கும்; பின்னர் ஒரு பரிசீலனை! இந்தப் பரிசி லனை யெல்லாம் எப்போதுதான் முடியுமென்று சட்டசபைப் பக்கம் கனவிலும் வரமுடியாத ஒரு நபர் நம்மிடம் வந்து கேட் டார். நாமும் ரத்னச் சுருக்கமாக அவருக்கு விடையளித்தோம். தோழர் பிரகாசம்காரு ஒரு மந்திரியாகி விட்டால் எல்லாம் சரி யாய் விடும் என்று கூறினோம். அவருக்கு நாம் சொன்னதின் பொருள் புரிந்ததோ என்னவோ சிரித்துக்கொண்டார். அவ்வ ளவுதான்! அவரிடமும் சரத்சந்திரபோஸ் அண்மையில் வெளி யிட்ட அந்தப் பொன்மொழியைக்கூறி வைத்தேன். "கதர்க் குல் லாய் லஞ்ச ஊழலின் சின்னம்" அவரும் திரும்பச் சொல்லிப் பார்த்துக்கொண்டார்.

ஆதீனங்கள் இப்போதெல்லாம் மிகச் சுறுசுறுப்பாய்க் காரிய மாற்றுகின்றன. நன்கொடைகள் அளிப்பதும், பள்ளிகள் நிறுவுவதும், மதப்பிரசாரம் செய்வதும் ஓய்வொழிவின்றி நடை பெறுகின்றன. ஒமாந்தூர் ரெட்டியாரின் அறநிலைய மசோதா இத்தனை 'விழிப்பை உண்டாக்கும் என்று நாம் கனவிலும் எண்ணவில்லை. கரந்தைத் தமிழ்ச் சங்கம், தமிழ் நாட்டில் கடந்த இருபது ஆண்டுகளாகச் சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வரு கிறது. அந்நிறுவனம் இப்போது பொருள் முடையால், திருவாடு துறை ஆதீனத்தார் வசம் மாற்றப்படுவதாக அறிகிறோம். ஆதி னத்தாரின் இத்தொண்டு பாராட்டக் கூடியதே! தமிழ்ச் சங்கத் தின் நோக்கங்களும் பணியும் முன்போன்றே, குறிக்கோளுக்கு இடையூறின்றி நடந்துவர வேண்டுமென்பதே நம் ஆசை! அவ் வகையில் தக்க கட்டுப்பாடுகளுடன்தான் சங்கத்தை நிர்வாகி கள் ஒப்படைப்பார்களென்று நம்புகிறோம். தமிழ்த் தொண்டாற் றிய கழகம் நீடித்து வேலைசெய்ய வேண்டுமென்பதோடு, அது திசைமாறிச் செல்லக்கூடாதென்பதும் நம் முக்கிய கருத்தாகும். ஆதினத்தார் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டிருப்பாரென்றும் எண்ணுகிறோம். மேலும் இத்தகைய நிலையங்களை அரசினர் ஏற் பதே பொருத்தமாகும்! மதச்சார்பற்ற முறையில் தமிழ் வளர்க் கும் பணி அப்போதுதான் சாத்தியமாகும்.

தமிழ் வளர்க்கும் பணி என்னும் போது சென்னை சர்க்கா ரின் ஆஸ்தான கவியமைப்பு நமக்கு நினைவுக்கு வருகிறது. தமி

முக்கு நாமக்கல் ராமலிங்கனாரை ஆஸ்தான கவிஞராக ஏற்படுத்தி இருக்கிறார்கள். இம்முறை பாராட்டத்தக்கது; நீடிக்கப்படவேண்டியதென்று குறிப்பிடவிரும்புகிறோம். தாய்மொழிகளைப் பெருமைப்படுத்தும் முயற்சியில் தலைப்பட்ட சென்னை அரசினரையும் பாராட்டுவதோடு, நாமக்கல்லாருக்கும் ஒரு வார்த்தை கூறவிரும்புகிறோம். "நீங்கள் ஆஸ்தான கவிஞர்; சர்க்கார் செய்வதற்கெல்லாம் ஆதரவு தேடும் பணி உங்கட்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருளல்ல. நீங்கள் உங்கள் கருத்துக்களை, சர்க்காருக்கு மாறுபடும் விதமாக இருந்தாலும், தைரியமாகக் கூறுங்கள். தாய்மொழிக்குச் சிறப்புச் சேர்க்க என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறுங்கள். தாய்மொழிக்குத் தீங்கு செய்யும் வகையில் சர்க்கார் காரியம்புரிந்தால் தடுத்துரையுங்கள். இப்படி நீங்கள் நடந்துகொண்டால்தான் தமிழ்மக்களின் பாராட்டுதலைப் பெறமுடியும்!" நம் ஆலோசனைகளை அவர் செவிமடுப்பாரோ என்னவோ? சர்க்காருககு ஆதரவு தேடும்வேலையில் மட்டும் பட்டம்வாங்கிய மறுநாளே முனைந்துவிட்டார். "இந்திபடியுங்கள்" என்று தமிழ்மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்; தெரியாமலா, ஆஸ்தான கவிப்பட்டத்தை அவருக்கு அளித்தார்கள், நம் அமைச்சர்கள்! நீடு வாழ்க நம் ஆஸ்தான கவிஞர்!

மதுவிலக்கு, குதிரைப்பந்தய ஒழிப்பு முதலிய சீர்திருத்தங்களில் அவசரப்படவேண்டாமென்று பண்டிதநேரு கூறினரல்லவா? வெறும வாய்ச்சொல்வீரர் அவர்! நம் தென்னாட்டுக் காந்தி ஆச்சாரியாரைப் பாருங்கள்! செயலிலேயே குதிரைப்பந்தயத்திறகு ஆதரவு தருகிறார். டெல்லி குதிரைப்பந்தயத்தில் கவர்னர் ஜெனரல் ஒரு 'கப்' பரிசளித்திருக்கிறாராம், எப்படிக் காந்தியம் தழைக்கிறது, பாருங்கள். ஆர். எஸ். எஸ். சங்கத்திற்குத் தடை நீக்கம்! அவர்களின் தலைவருக்குச் செல்லுமிடமெங்குஞ் சிறப்பு! அவர்களைப் பற்றிய செய்திகளும் புகைப்படங்களும் பத்திரிகைகளில் பக்கம்பக்கமாக வெளிவரத் தவறுவதே இல்லை! இத்தனையும் மகாத்மா மறைவின்போது 'பாயசம்' குடித்த மகானுபாவர்களுக்கு நடைபெறுகிறதென்றால் நேரு மதுவிலக்கை எதிர்ப்பதிலும், ஆச்சாரியார் 'கப்' வழங்குவதிலும் என்ன புதுமை இருக்க முடியும்?

உலகத்திலேயே ஆஸ்திரேலியாவில்தான் அதிகம் தந்தி கொடுக்கிறார்களாம். ஆண்டு ஒன்றுக்குச் சராசரி ஒவ்வொரு மனிதரும், அங்கே 4½ தந்தி கொடுப்பதாகக் கணக்குச் செய்திருக்கிறார்கள். நார்வே இரண்டாவது ஸ்தானம் பெறுகிறது; அமெரிக்கா மூன்றாவதுதான்! நம் இந்தியாவிலோ தந்தியைப்பற்றிப் பேச்சே இல்லை. ஏனெனில் தந்திக்கு முன்னர்க் கடிதங்கள் போய்ச் சேர்ந்துவிடும்போது, தந்திக்கு என்ன அவசியம் வந்துவிட்டது! எனவே ஆஸ்திரேலியா இந்தப் பெருமையைத்தட்டிக் கொண்டு போவதில் நமக்கு ஆட்சேபணையே இல்லை!

— ஆண்டி

கொள்கை பெரிது!

தளர்ந்துவிட வேண்டாம்

ஐந்து லட்சத்தைக் காப்பாற்றுவதற்காகத் 'திராவிடத் தந்தை' எனப் போற்றப்பட்ட பெரியார், தமது 72 வது வயதில் மணம் செய்து கொண்டார் என்ற செய்தி கழக ஊழியர்கள் தலையில் இடியைப் போல் விழுந்தது மன்றி, அவர்களது மானத்தையே தரையிலிட்டு நசுக்கி விட்டாற் போலாய் விட்டது. உலகப் பெரியார்கள் குழுவில் 'பெரியாரும்' ஒருவராக எண்ணப்படுவார் என்று நாம் கண்ட கனவு வீண்கனவாயிற்று! தம்மைச் சித்திரவதை செய்வார்களென்று அறிந்தும், கொள்கைக்காகப் பிடிவாதமாகச் சிலுவையில் அறையுண்டார் இயேசு! போப்பாண்டவர் குழாமின் 'லீலாவிநோதங்களையும் குருட்டாட்டங்களையும் எதிர்த்துப் போராடி வெற்றிக் கொடியைப் பிடிவாதமாக வேரூன்றினர் மார்ட்டின் லூதர்! பிடிவாதத்தைக் கைவிடாது உலகம் வியக்கத்தக்க தனது கொள்கையைப் பரப்பினர் வீரர் லெனின்! பிடிவாதத்தினுல் 'அன்பு' என்ற தர்மத்தை நிறுவினுர் உத்தமர் காந்தி! பிடிவாதத்தினுல் உலகப் பெரியோர்கள் வெற்றிக்கொடி நாட்டிப் புகழடைந்தனர். ஆனுல் சகல கொள்கைக்கும் மேலான ஓர் உயர்ந்த கொள்கையைக் கொண்டுவந்த ஈ. வே. ரா. தனது பிடிவாதத்தினுல் வெற்றிச் சிகரத்தின் மீதிருந்து தலைகீழாக உருண்டார்! அவரது கொள்கைக்காக உழைத்து வந்த ஊழியர்க்கு இழுக்குண்டாக்கியது மின்றி ஆரிய இனம் நம்மை நோக்கிக் கேலிக்கூத்தடிக்கச்செய்து விட்டார்! ஆனுல் கிழவர் இழைத்த பிழையினுல் 'கூண்டோடு கைலாசமாய்'க் கழக வளர்ச்சி குழியில் புதைந்து விடும் என்று யாரும் எதிர்பார்க்க வேண்டாம்! தலைவர் ஏற்படுத்திச் சென்ற மாசைக் கழக இளைஞர்கள் துடைக்க முற்பட வேண்டும. தமிழ் நாட்டிலே நிலவிய ஜாதித் துவேஷத்தையும் தீண்டாமையையும் ஒழிக்க அரும் பிரயாசை எடுத்துக் கொண்டது மின்றிக் கடவுள் பெயரால் நடைபெறும் அக்ர மங்களையும் அம்பலப்படுத்திக் கண்முன்னே நிறுத்திய திராவிடக கழக ஊழியர்கள் கிழவரின் 'கொடும' செயலாலொன்றும் தளர்ந்துவிட வேண்டாம். மாசற்ற ஊழியத்தில் விழுந்துவிட்ட 'ஒரு துளி' விஷத்தைத் துடைத்துவிட்டு மேன்மேலும் கழகத்தின் வீரலட்சியத்தையும் கொள்கையையும பாரெங்கும் பரப்பவேண்டும்! வாழ்க திராவிடம்!

காரைக்குடி "சுலோசனு"

மாற்றுவோம் தலைமையை

"பெரியார் திருமணம் பெரியாரின் சொந்த விஷயம்." "எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் எனக்குத் தென்படவில்லை. எனது உடமை

யையும் எனது கருத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு ஒரு பிரச்சார மிஷினையும் ஏற்படுத்தச் செய்யப்படும் காரியம்." இவ்விரண்டு கருத்துக்களும் 'விடுதலை' 5—8—49 இதழின் தலையங்கத்தில் காணப்படுகின்றன. திருமணம் சொந்த விஷயம் — ஆனால் கழகத்தை நடத்த (பிரச்சாரம் செய்ய) ஒரு பிரச்சார மிஷின் தேவை! அதற்காகவே இத் திருமணம்!

இந்த மாறுபட்ட கருத்துக்களைத் தாங்கி வந்த தலையங்கத்தைப் படித்த கழகத் தோழர்கள், இது பொருந்தா மணம் செய்தும் பொருத்தமான மணம்தான் என்று சாதிக்கும் பெரியார் எழுதியதுதான் என்ற முடிவிற்கே வந்திருப்பர், நிச்சயமாக! ஒரு பக்கம் "தலைவர் அறிக்கை"! அதற்கும் கீழே "பெரியார் சென்னை வருகை" என்ற குறிப்பு! பிறிதொரு பக்கம் "ஆதரவுக் கடிதங்கள்" என்ற தலைப்பில் பெரியாரின் வேண்டுகோள்! இவற்றை யெல்லாம் பார்த்துவிட்ட பிறகு — தலையங்கத்தைத் தெள்ளத் தெளிய படித்துவிட்ட பிறகு நம் முடிவு எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்? அது மட்டுமல்ல, நாம், பெரியாரின் எழுத்துக்கள் மூலம் — அவர் தம் அரிய சொற்பொழிவுகள் மூலம் பகுத்தறிவு பெற்றவர்கள். அப்படி யிருக்கப் பெரியார் நம்மை ஏமாற்ற முடியாது, ஆனால் ஏமாற்றும் நோக்கத்தோடு மறைமுகமாக—கையெழுத்திடாமல் திட்டமாக எழுதிவிட்டார், இனி எனக்குப் பிறகு கழகத்தைச் நடத்திச் செல்ல ஏற்படுத்திய வாரிசு தான் மணியம்மை—அதற்காகவேதான் திருமணம் என்று! ஆனால் வழக்கம் போல, இன்றைய 10—8—49 தலையங்கத்தில் தனது நிலையில்லாத கருத்தை 'விடுதலை' உதிர்த்துள்ளது. அதாவது "இயக்கத்துக்குமணியம்மையைத்தலைவராக்குவதற்கு திருமணம்" என்பது மிகமிக இழிவானகற்பனை. "இயக்கத்துக்குத்தலைவி ஆக்க" என்றசொல் தலைவரது எந்தப் பேச்சிலும், எழுத்திலும் இல்லை. "ஆனால் அந்த அர்த்தம் கொடுக்கிறதே" என்றால் தலைவர் "அந்தக்கருத்தில் அது சொல்லப்படவில்லை என்று சொல்லிவிட்ட பிறகு அதைப்பற்றி பேசுவது எந்த வகையில் யோக்கியமுடையதாகும்?" எவவளவு மாறுபாடான கருத்தை விடுதலை உதிர்க்கிறது என்பதற்கு மேலும் ஒரு சான்று! எனவே, நாளுக்குநாள், நிமிடத்திற்கு நிமிடம் தான்கூறினதையே மாற்றிக் கூறும் பண்பு படைத்த 'விடுதலை' இனி நமக்குப் பயன்படாது. நேற்று வந்தவர்கள்—அதுவும் மாணவர்கள் பேச்சாளர்களாகி விடுவதா? என்று நம்முடைய பகுத்தறிவை வளர்த்த 'விடுதலை'— நாம் வளர்த்த விடுதலை கூறும் பொழுது நம் நெஞ்சமே வெடித்துவிடும் போலிருக்கிறதே! இளைஞர்கள் இயக்கத்தினால் லாபமடைந்து விட்டார்களாம்—கூறுகிறது 'விடுதலை'! என்போன்று படிப்பை மறந்து இயக்கப் பணியில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் எத்தனை பேர் என்று பகுத்தறிவைப் பெரியாருக்கு அடகுவைத்துவிட்ட 'விடுதலை'க்குத் தெரியாது! என்போன்று படிப்பை

முடித்தும், இயக்கப் பணியில் ஈடுபட்டிருந்த காரணத்தால் வேலையின்றித் தத்தளித்த மாணவர்கள் எத்தனை ஆயிரம் என்பதுகுதர்க்கமே பேசியாக வேண்டும் என்ற நிலைக்குவந்து விட்ட' விடுதலைக்குத் தெரியாது! பெரியாருடன் அதற்கும் ஒரு முழுக்கு — அதுவும் கடைசி முழுக்காக! இனி பெரியாராலோ, 'விடுதலை'யாலோ நாட்டுக்கும், இளைஞர்களுக்கும், சமுதாயத்திற்கும் ஒருபயனுமில்லை. தலைமை மாறவேண்டும், உடனடியாக! இயக்கம் இளைஞர் கைக்கு வரவேண்டும்! அதுதான் நியாயம்—முறை—நேர்மை! இனி விளக்கங்கள் தேவையில்லை—திராவிடக்கழக நிரந்தரத் தலைவர் லீடர் என்று தன்னையே உயர்த்திக் கொண்டு — தலைமைபபதவி (எவ்விதத் தவறு இழைத்தாலும்) தனக்குதான் சாசுவதம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு பெரியார் விடும் அறிக்கைகள் அவசியமில்லை! நாமபகுத்தறிவுவாதிகள் அவர் கூற்றுப்படி; எனவே பகுத்தறிவு வாதிகளாகியநமக்கு இனி அவரது, தலைமை—லீடர் என்று இதுவரை வெளிவராத புதியமுறையில் வெளிவரும் சொற்களுடன் கூடிய அறிக்கைகள், வேண்டுகோள்கள் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! மாற்றுவோம் தலைமையை! அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம், உடனடியாக!

சென்னை தன மனோகரன்.

மனம் உடைந்தேன்

புத்துலகச் சிற்பி, தென்னாட்டு ரூசோ, தள்ளாத வயதில் பொல்லாத இந்தியை எதிர்த்துச் சிறைசென்ற பெரியார் என்று பன்னெடுங்காலமாகப் போற்றப்பட்டு வந்த பெரியார் கேவலம் திருமணம் என்ற படுபாதாளத்தில் இறங்கிவிட்டார் என்ற சேதியைகேட்டராணுவத் தோழர்கள் என்றுமில்லாச் சோகத்தில் ஆழ்ந்துவிட்டனர். எவர் தன்வாழ்க்கையைப் பொதுப் பணிக்கு அர்ப்பணம் செய்து என்போன்ற இளைஞர்களை இன்பபுரிக்கு அழைத்துச் செல்வார் என்று எண்ணியிருந்தேனோ அன்னார் முகத்திலேகரியைப் பூசிவிட்டார். இராணுவத் தோழர்களிடையே கழகக் கொள்கையைத் தீவிரமாகப் பரவச் செய்து கொண்டிருந்த இந்த நல்ல தருணத்தில் திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தியைக் கேட்டு மனம் உடைந்தேன்..........

ஜான்ஸி கா. பழனிச்சாமி.

கண்டனம்

. புத்துலகச் சிற்பி, புதுமையின் முன்னோடி, எங்கள் பெரியார், எங்கள் ஐயா, எம் தலைவர் என்றெல்லாம் அன்புச் சொற்களால் அர்ச்சிக்கப்பட்டு வந்த தன்மான இயக்கத்தின் தந்தையா தவறு செய்வார்? அதற்கு ஏதோ ஒரு உள் அர்த்தம் இருக்க வேண்டும் என்று எண்ணினோம் திருமணச் செய்தி கேட்ட ஆரம்பத்தில். ஆனால் பொன்னி, திராவிடநாடு ஆகிய இதழ்களில் தலைவரின் நடத்தை தவறெனப்படுவது ஏன் என்பதற்கான விளக்கங்கள் வந்தபோது நிலைமை உணர்ந்து கொண்டோம். உள்ளம்

உடைந்து விட்டது என்பது மட்டுமல்ல ஊருக்குபதேசம் எனக்கில்லை என்ற பழமொழிக்கு இலக்காக்கி விட்டதுவே தலைவர் செய்கை என்று வருந்திணேம். காரணம், ஆடவர் பெண்டிர், பெரியோர், அறிஞர் என்ற சொற்களைக் காட்டிலும் மாணவர் என்ற சொல் மிகுந்திருந்தது பகுத்தறிவுப் பாசறையில். எனவே தலைவரின் செய்கையால் மிகுதியான மன வருத்த முள்ளவர்கள் மாணவர்களாகிய நாங்கள் தான். லட்சியத்தின் கருவூலம் என்று வருங்கால வரலாற்றேடுகள் தன்மான இயக்கத்தின் கொள்கைகளை, கோட்பாடுகளை, குறிக்கோள்களை, சிறப்புறத் தீட்டிக் காண்பிக்கும் என நினைத்துக் கொண்டிருந்த இளம் உள்ளங்கள் கசக்கிப் பிழியப்பட்டு விட்டன தலைவரின் இத்தகாச் செய்கையால். விழிகளில் லட்சியம் சுடர்வீச உதடுகளில் வெற்றிப் புன்னகை நெளிந்தோட, ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது வணக்கம் என்று கரங்கூப்பிய அதே தோழர்கள் இன்று சோகத்திரையின் நிழலாட்டம் வெந்து நொந்த உள்ளம் வேதனையின் கோடுகள் வெளியிட்ட முகத்தில் பதியக்கலங்கும் கண்களை, கரங்களால் பொத்திக் கொண்டே விம்மி, விம்மி, தேம்பித் தேம்பித் தங்கள் உள்ளக் குமுறலை, இதய வேதனையைத் தவிர்க்க முற்படும் காட்சியைக் கண்டு நீர்மல்கும் கண்களுடன் கண்டனம் தீட்டுகிறேன். வாழ்க்கையின பெரும் பகுதியை இடையறா உழைப்பில், ஏனையோர் மெச்சும் வண்ணம் நடத்திய நீவிர் கொண்ட முடிவு இதுதானா? தலைமைப் பதவியைத் தளபதியிடம் ஒப்படைத்து, தனித்து நின்று நலம் பெறும் வகையில் ஆலோசனை சொல்வதுதான் நேரிய முறை. வையத்து மக்களால் போற்றப்பட்டு வந்தவர்கள் தவறிவிட்ட போது அதை உணர்ந்தபின் நடந்துகொண்ட முறை இவ்வகையில்தான்.

"கனலன்"
மாணவன், கரூர்.

பட்டம் வேண்டாம்

சென்ற மூன்று வருடங்களாகத்தான் நான் திராவிடக் கழகத்தில் சேர்ந்தேன் பெரியாரைத் தலைவராக ஏற்றேன், பெற்ற தந்தையினும் உற்ற தந்தையராகப் பாவித்தேன். அவர் கொள்கையில் வளம் இருப்பதைக் கண்டு வணங்கினேன். அதற்கு இன்றைய நிலையில் எனக்கும் என்போன்ற கழகத் தொண்டர்களுக்கும் அவர் கொடுக்கும் பரிசு "முட்டாள்கள் தான் தேவை"—இது தான் நமக்குத்தரும் பட்டம். இதுகாறும் முட்டாள்களாய் இருத்தி வைக்கப் பட்டிருக்கிறோம் என்றாலும் இனியும், சுட்டிக் காட்டிய பிறகும், டை பட்டதாரிகளாக இருக்க விரும்பவில்லை.

செ. தம்புசாமி
ஆடுதுறை

நம் காணிக்கை

தலைக்குத்தான் குல்லாய் தைக்கலாம். குல்லாய்க்குத் தகுந்தபடி தலையைப் பெரியதாகவோ, சிறியதாகவோ ஆக்கிக்கொள்ள முடியாது. அதைப் போல் கழகக் கொள்கைகளுக்குத் தான் ஈ.வே.ரா. தலைவர். தலைவருக்காகக் கழகமல்ல இனி அவர் தலைவராக இருக்கவும் முடியாது. ஆகையால்

அதற்குத தகுந்த தலைவரை ஏற்படுத்திக் கழகக்கொள்கைகளைத் திக்கெட்டும் பரவச் செய்து, மக்களைப் பழமைச் சூழ்ச்சியின் பாழுங் கிணற்றிலிருந்து கரையேற்றும் முயற்சியைக் கைவிடாமலிருப்பதுதான், நாட்டிற்காகத் தன்னலத்தைப் பாராமல் உழைத்து உயிர்நீத்த மாவீரர்களுக்கு நாம் செய்யும் காணிக்கை.

சொ. பொன்னுச்சாமி.
முசிரி

முடியாது

பகுத்தறிவுப் பாதையை வெட்டித்தந்த, வரதட்சணைப் பேயை விரட்ட உறுதிதந்த, பால்யமணத்தைக் கண்டிக்க பக்கபலம் தந்த, விதவாவிவாகம் நாட்டில் வேண்டுமென்று நாடே அதிரக்கூவ உரிமை கொடுத்த வயோதிகப்பருவத்திலே வாலிபத்தின் எழில் மங்கையை வலிந்து மணக்கும் வஞ்சகத்தன்மையைச்சாடி முட்டாநரம்புகளில் முறுக்கேற்றிய—அறியாமைத் திரையைக் கிழித்து அழகுமயமான உலகைக் காட்டிய ஒப்பற்ற தந்தை இல்லை...பெரியார்... தவறியது கேட்டுத் தத்தளித்தநாம், மன்ருடிய நாம், கண்ணீர் சிந்திட நாம, கதறிய நாம், கைகூப்பி வேண்டாமென்ற நாம், செய்வதென்னவென்று திகைத்த போது அவர்காட்டிய அறிவுக் கதிர்களே நம் அகக்கண் முன் தென்படத் தொடங்கின. அந்த அப்பழுக்கற்ற அறிவுக்கதிர்களே அவர் தவறியதை எடுத்துக் கூறுங்கள் ஆக்கம் தந்த தலைவராணுலென்ன, மன்னனுலென்ன, இறைவனுனுலென்ன குற்றத்தைக் கண்டு அஞ்சாது உரிமைப் போர் புரிந்த இனத்தவரா தலைவர் தவறினரென்பதற்காகச் சிந்தியாது, பகுத்தறிவைத் திரையிட்டுப் படுகுழியில் விழுவது என்று அவை எங்களை நோக்கிக் கேட்டன. எனவேதான் கொள்கையேபெரிதாகக்கொண்டநாம் பாதை தவறிய தலைவர்களின் கீழ் மீண்டுமிருந்து பணிபுரிய மாட்டோமென்று அறிவுறுத்துகிறோம். வேஷதாரிகள் காதில் விழத் திடமாக, திட்டவட்டமாக, திகைப்பேதுமின்றிக் கூறுகிறோம். பாதை தவறிய தலைவரின் கீழிருந்து பணிபுரிய முடியாது. முடியவே முடியாது.

அண்ணுதாசன்.
கொளும்பு

துரோகி



இருபத்தெட்டாம் அத்தியாயம்

சோணி, சந்த்!

மெதுவாக மாடிப் படியேறி வந்த சோணிசந்த் அந்தச் சாளரத்தின் கதவுகளைச் சிறிது திறந்தான். அங்கு இருந்த காட்சி விநோதமாக இருந்தது. அவர்கள் உரையாடலை உற்றுக் கேட்டான். இராஜினியின் போக்கு விபரீதமாக மாறிவிட்டதைக் கண்டு அவள் இனி உயிர்வாழ்ந்தால், தன் தலைவருக்குத்தான் ஆபத்தென்று எண்ணினான். தன் இடையில் மறைத்துவைத்த சொருகுவாளை எடுத்து வீசினான். அடுத்த கணத்தில் பக்கத்து அறையில் நுழைந்து அங்கிருந்த மையத்தூணில் அமைந்திருந்த இரகசியக் கதவின் வழியாகக் கீழே வந்து தோட்டத்துப் பக்கமாக ஓடினான்.

ஒட்டு மீசை, ஒட்டு தாடி, வியாபாரி வேடம்......எல்லாம் கலைந்தது! அவன் குதிரையேறி ஒட்டமாக வங்கத்திற்குப் புறப்பட்டான். போகும் பொழுது அங்கங்கே உள்ள 'ஜே ராம்சந்த்' ஆட்களிடம் எச்சரிக்கை செய்தான்! கடைசியில் தலைநகர் நெருங்கவே அவர்கள் என்னதான் பேசிக்

கொள்கிறார்கள் என்றறிய ஒரு திட்டமிட்டான். ஆகவே ஒரு மாட்டுவண்டியைத் துணைக்கு வைத்துக்கொண்டு ஒரு நாடக மாடினான். அவன் நினைத்தபடி காரியம் நடந்தது. அவன் தனது பிரயாணச் செய்தி களைத் தலைவரிடம் சொல்லி விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டே அந்த வீரர்களுடன் பிரயாணம் செய்தான்.

கடைசியில் கோட்டை வாயிலில் இறக்கிவிடப்பட்டவுடன் தனது வேடத்தை மாற்றிக் கொண்டான். இதுவரை பட்டிக்காட்டுச் சிறுவனாக நடித்தான். இனி அவனது இயல்பான வடிவத்துடன் அமீன் சந்த் இல்லத்திற்கு ஓடினான்.

வீட்டினுள் நுழைந்தான். அங்கு யாரும் இல்லை. மேலும் உள்ளே போனான். ஊர்மிளா உட்கார்ந்திருந்தாள். இவனைக் கண்டதும் ஆவலோடு ஓடி வந்து தழுவிக் கொண்டாள்!

"மாமா, அவரும் திரும்பி விட்டாரா?"

"அடி அசடு, அவசரக் குடுக்கை! முதலில் அப்பா எங்கே? பிறகு மற்றதைப் பேசலாம்"

சோணிசந்த் ஓடினான். அப்பொழுது அவர்கள் மது அருந்திக் கொண்டிருந்தனர்.

"தங்கள் ஒத்துழைப்பிற்கு இந்தக் கோப்பை"

"பழிக்கு, இந்தப் பாராட்டுதலா?"

"உமக்குப் பழைய புத்தி போகவில்லை!"

"என் அந்தராத்மா இன்னமும் என்னைச் சுட்டுக் கொல்கிறது"

"இதை அருந்தும்......"

அமீன்சந்தின் ஹிஹிஹி... ஒலித்தது.வைத்தியர் தொண்டையைப் பிடித்துக் கொண்டு கதறினார். அப்பொழுதுதான் சோணிசந்த் உள் நுழைந்தான்!

"ஐயோ இதென்ன?"

"இதுதான் கொலை!"

"இது எண்ணிக்கையில் இரண்டு"

சோணிசந்த் கேட்ட கேள்விக்கு அமீன்சந்த் அழுத்தந் திருத்தமாகப் பதிலளித்தான். பிறகுதான் அவன் வந்த விபரத்தை யறிய விரும்பினான். இவர்கள் பேசத்தொடங்கியவுடன் வைத்தியர் மெதுவாகக் கேட்டார்!

"இது என்ன?"

—பரிதாபமாக இருந்தது அவரது குரல்!

"இது தாங்கள் கொடுத்த நஞ்சில் எஞ்சியது!"

"ஐயோ......"

வைத்தியர் செய்ய முடியாத, செய்ய வேண்டாத நிலையடைந்து விட்டார். ஆம். அவர் சாவைத் தழுவி விட்டார்! இனி அவரின் உதவி அவனுக்கு எதற்கு? அவர் உயிர் வாழ்வது அவனது பயங்கரத் திட்டத்திற்கு ஒரு அபாய அறிவிப்பு! ஆகவே தான் அவரது உயிரைக் குடித்து விட்டான் வஞ்சகன். அந்த அயோக்கிய சிகாமணி

அவருக்கு நஞ்சுக்கோப்பையைப் பரிசளித்தான்!

"வர, வர நம் நிலைமை சிக்கலாகும்!"

"ஏன்?"

"நான் அவ்வப் பொழுது அனுப்பிவைத்த டெல்லிச் செய்திகளிலிருந்து புரிந்திருக்குமே!"

"இன்று காலையில் கடிதம் தந்த விபரம் மட்டுமே வந்தது"

"ஆம், என் டெல்லிப் பயணம் ஒரு பெரிய தொடர்கதை. இரவு வந்து பார்த்துக் கொள்ளலாம். நாம் முதலில் அலிவர்திகானிடம் செல்ல வேண்டும். அந்த முரட்டு முகம்மதியர்கள் வந்துவிட்டார்கள்!"

"சரி, இந்தப் பிணத்தை இங்கேயே அடக்கம் செய்துவிட்டு, கணத்தில் அரண்மனைக்கு வந்துவிடு. நான் உடன் புறப்பட்டுப் போகிறேன்"

சோணிசந்த் தூண்டிவிட்டபடியே அமீன்சந்த் தன் மகள் ஊர்மிளாவுடன் அரண்மனையை நோக்கி நடந்தான். அங்கு அப்பொழுது பலர் கூடியிருந்தனர். அமீன்சந்த் உள்ளம் கள்ளத்தனத்தால் பள்ளமாகியிருந்தது! ஆகவே அவன் முகத்தில் குருதி சுண்டிக் கிடந்தது. அது வருத்தத்தால் வந்த மாற்றம் என்று பார்ப்பவர்கள் சொல்வார்கள். விபரமறிந்தவர் வஞ்சகத்தால் வந்த விகாரம் என்று நிச்சயம் கூறுவர்!

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

சாவு முனையில்!


கூட்டிலில் கிடந்தான் அலிவர்திகான். சாவு அவனைத் தழுவிடக் காத்துக் கொண்டிருந்தது. இதை அவனது சுழலும் கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன. 'கர் கர்' என இராகம் பாடும் நெஞ்சு ஈளைச் செய்தி பரப்பிக்கொண்டிருந்தது.

பக்கத்தில் ஒரு பணிப்பெண். ஆம் அவள்தான் நளினி! ஆடை அலங்காரம் நலுங்காமல் குலுங்காமல் மருந்து குழைத்துக் கொண்டிருந்தாள். அவளது அபாரமான அலங்காரம், அவளுக்குக் கவலையிருப்பதாக நடிக்கும் நடிப்பிற்கு ஒரு பெரிய 'ஓசாலை' யாக இருந்தது. அங்கு அமீன் சந்த் நின்றுகொண்டிருந்தான்.

எரிமலை வெடிக்கப் போகிறது என்று தெரிந்து கொண்டும் அதன பக்கத்திலுள்ள சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளியைப் போலத்தான் அவன நிலைமை இருந்தது!

திரைக்கு அருகில் ஆஸ்தான அரண்மனைப் பெண்கள் - தங்கச் சிலைகள் நின்றுகொண்டிருந்தனர்.

மீர்ஜாபர், அரண்மனையில் மிகப பெரும் பதவியாளன், அங்கு இருந்தான். இவான் மோஹன்லால் செய்வதென்னவென்று தெரியாது தவித்துக் கொண்டிருந்தான். இன்னும் இப்படிப் பல திறப்பட்ட அரசாங்கப் பெரிய பதவியாளர்கள் அங்கு கூடியிருந்தனர்.



இருளடைந்த முகத்துடனிருந்த அமீன்சந்த் ஓரக் கண்களால் நளினியைப பார்த்தான். அவன் கண்களில் அப்பொழுது பசுமையில்லை. பயம், குளங்களில் பாசி படர்ந்திருப்பது போல் பரவியிருந்தது. அவள் மட்டும் எந்த வித உணர்ச்சியையும் கொட்டி இரைத்துவிடவில்லை!

அரண்மனைக் கட்டிடங்களில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் குதூகலம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டது. விம்மல் கேட்காத இடமில்லை. வேலைக்காரர்கள் வாய்விட்டுக் கதறினர். நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் ஒரே பயங்கர நிசப்தம்! எங்கும் சுடுகாட்டு அமைதி! எந்த மூலையிலிருந்தும் எக்குர



லையும் கேட்க முடியவில்லை. பறவைகள் கூட வருத்,தம் தெரிவித்தன போலும் - பறவைகள் கூடப் பறக்கவில்லை! புள்ளொலி மூர்ஷிடாபாத்தில் கேட்கவில்லை!

சூரியன் மறைகிற நேரம். அந்திப்பொழுது! மஞ்சள் வெயில் வீசிக் கொண்டிருந்தது! இரண்டு குதிரை வீரர்கள் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தார்கள்.

அரண்மனைக்குள்ளோ......? சாவுடன் போராடிக் கொண்டிருந்தான சுபேதார். அந்த நேரத்திலும் நளினியைக் குளிர்ந்த பார்வையால் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தான்! அது படுகளம் என்பதை மறந்து விட்டவள் போலப்

பவள இதழ்ப் பெட்டியைத் திறந்தாள். முத்துக் குவியல் சிதறியது! இதனை அமீன்சந்த் கவனிக்காமல் இருப்பானா?

தந்தையுடன் வந்த ஊர்மிளாவோ தாயைக் காணாத கன்றைப் போலத் தவித்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் முடின்கானைத் தேடிக் கொண்டிருந்தன!

"தண்ணீர்...ந......ணி......ணி" என்று தடுமாறினான் சுபேதார். மெதுவாக அருகில் அமர்ந்து ஒரு அரவணைப்புத் தந்து, அவன் வாயில் நீரைப் பெய்தாள் அவள். அவன் முகத்தில் தெளிவு பிறந்தது.

"ஸுராஜ், இன்னும் வரவில்லையா?" என்றான்.

"கவலைப்படாதீர்கள். விரைவில் வந்து விடுவார். நாட்டின் எல்லையை அடைந்து விட்டார்கள் என்று செய்தி கிடைத்து விட்டது" என்றான் திவான.

அப்பொழுது
திடு, திடு, திடு......
காலடி யோசைகள!
"தாதா..."
தாதாவும் பேரனும் கட்டித்



தகப்பனார்:- (தாயிடம்) பையன் பரீட்சையிலே தேறிவிட்டான். அவன நமபரும பேப்பரில் வந்துடுத்து- இனி அவனை அவிழ்த்து விட்டிடலாம்.

தழுவினார்கள். அழுதார்கள். அந்தக் காட்சி கலங்காத கல் மனத்தையும கரைத்து விடும்!

மீண்டும் சுபேதார் பேசினான்.

"நீங்கள் எல்லோரும் போங்கள். ஸுராஜுவுடன் தனித்துப் பேசவேண்டும்"

எல்லோரும் சென்றனர்.

"என் அருமைக் குழந்தாய். நான் சாகிறேன். கிழவன், காலத்திலேதான் சாகிறேன். இன்றோடு எனது இவ்வுலக வாழ்வு முடிகிறது. என் ஏடு கிழிகிறது! ஆனால் நாளை நீதான சுபேதார்! உனக்குப் புதுக் கணக்குத் தொடங்குகிறது..."

"தாதா நீங்கள் பேசுவது பயங்கரமாக இருக்கிறது. நீங்கள் சாகமாட்டீர்கள்! அரசாங்க வைத்தியர்கள் அத்தனை பேரும் கைவந்தவர்கள்"

"போதும் வீண்பேச்சு-இருக்கும் இரண்டொரு நிமிடங்களில் சொல்லவேண்டியதைச்சொல்லி விடுகிறேன. தடுக்காதே"

"குழந்தாய் ...நீ.. உன்..... ஆ...யு...ளி...ல்... அந்த...வெ ...ள்...ளைய...ரி...ட...... ம்...... உள்ள...ஆ...யு ...த...ப...ல... த்...தை.. ஒழி...த்...து...விடு."

அலிவர்திகான் தலை சாய்ந்தது. பேரன் பாட்டன் மேல் விழுந்தான். முடின் கண்ணீர் வடித்துக்கொண்டே அந்த அறையின் வாயிற் படியில் நின்று கொண்டிருந்தான். ஊர்மிளா அவன் அருகிலேயே அசைவற்றிருந்தாள். மற்றவர்களோ நடைப் பிணங்களாக நடந்து கொண்டிருந்தனர். வெளியே!...... அமீனசந்தும், நளினியும் ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டே சென்றனர். சூரியனும் மறைந்தான். இருள் வந்து சூழ்ந்து கொண்டது!

[தொடரும்]

வட மொழி இலக்கியம்

அறிஞர் கா. அப்பாத்துரை

வடமொழியின் தனிச் சிறப்புக்கள்

வழக்காறற்ற உயர் தனிச் செம்மொழிகளிடையே வட மொழி உலகின் முதன்மையான மூன்று மொழிகளுள் ஒன்றாய் ஒளி பெறுகின்றது. அதனையொத்த மற்ற இரு மொழிகள் பண்டைய மேனாட்டு மொழிகளாகிய கிரேக்கமும் இலத்தீனமுமே. இம் மூன்றனுள்ளும்கூட, கிரேக்கமொழியுடன் ஒத்த சிறப்பு வடமொழிக்குத் தரப்பட்டுள்ளது.

வடமொழி சொல்வளமும் பொருள் திட்பமும், ஓசை நயமும் பெருமித நடையும் உடையது. இதன் இலக்கியம் அளவிலும் பண்பிலும் உலக இலக்கியங்களிடையே கிரேக்கமொழியுடன் போட்டியிடத் தக்க பண்டைச் சிறப்புடையதாய் விளங்குகிறது. நாடகத்துறையிலும், இலக்கண ஆராய்ச்சியிலும், அணியியல் அல்லது இலக்கிய ஆராய்ச்சித் துறையிலும் அது உலக இலக்கியத்திலேயே முனைத்த பங்கு கொள்வதாயுள்ளது. உணர்ச்சிப்பாத் (Lyric) துறையில் வடமொழி இலக்கியத்தின் அளவு குறைவாயினும் உலகின் மிகச் சிறந்த இலக்கியத்துடன் பண்பில் ஒப்பிடத்தக்கதாயிருக்கிறது.

வேதமொழியும் வடமொழியும்

வேதமொழி, சமஸ்க்ருதம் ஆகிய இருமொழிகளும் இன்று வடமொழி என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. ஆயினும் வடமொழியாளர் வேத மொழியை ஸமஸ்க்ருதம் என்றோ, வேதமொழி நூல்களை இலக்கியம (ஸாகித்யம்) என்றோ அழைககவில்லை. வேத மொழி (வைதிகி) என்றும் சமய நூல்கள் (சாஸ்த்ரங்கள்) என்று மட்டுமே குறித்தனர். கால தேச இனத் தொடர்பு நோக்கி இவ்விரண்டையும் கோவைப்படுத்தல் பொருந்துமேயாயினும், இத் தொடர்பு உண்மையில் இவை இரண்டனுக்கு மட்டுமன்றி எல்லா வட இந்திய மொழிகளுக்குமே உரியதாகும்.

இவையனைத்தின் வரலாற்றையும் இக் காரணத்தை முன்னிட்டுக் கோவைப்படுத்துவதானால் அது வடநாட்டுமொழிகளின் வரலாறு ஆகுமேயன்றி வடமொழி வரலாறு ஆகாதென்னலாம்.

பண்டை மொழியாராய்ச்சி சமய ஒப்புமையாராய்ச்சி ஆகியவற்றில் ஈடுபட்டவர்க்கு மட்டுமே வேத மொழி பெரிதும் பயனுடையது. இலக்கியச் சுவைஞருக்கு இலக்கியமொழியாகிய சமஸ்க்ருதமே பயனுடையதாகும்.

வட இந்தியத் தாய்மொழிவாழ்வுகளும் வடமொழி வாழ்வும்

வடமொழி இன்று பேசப்படும் மொழியன்று. அதன்

இலக்கிய வாழ்வும் ஓய்ந்து விட்டது. ஆனால் இலக்கிய வாழ்வு இருந்த காலத்திலும் கூட அது பேசப்பட்டதாகத் தெரியவில்லை. உலகில் புலவர் நாவில் ஊடாடியதன்றிப் போது மக்கள் நாவில் என்றும் எத்தேசத் தும் நடமாடாத மொழி வடமொழி ஒன்றே என்னலாம். அதனை இக் காரணம் கொண்டே தேவமொழி என அழைத்தனர்.

வேதமொழியும் வடமொழியைப்போலப் பேச்சுவழக் கிறந்த நூல் வழக்குமொழியாயினும் அது பின்னதைப் போன்ற செயற்கை இலக்கிய மொழியன்று. அது உண்மையில் கி. மு. 1500-லிருந்து 800 வரை இந்திய ஆரியர் பஞ்சாபில் வாழ்ந்த காலத்தில் பேசிவந்த மொழியே யாகும். அவர்கள் கிழக்கே குருபாஞ்சால நாட்டிற்குப் பரவுவதற்குள் (கி.மு. 800-200) நூல்வழக்குமொழியிலிருந்து பேச்சு மொழி நெடுந் தூரம் விலகிற்று. நூல் வழக்கு மொழி வேதமொழி என்றும் பேச்சுவழக்கு மொழி "பாஷா" என்றும் வழங்கின. மொழியறிஞரால் இது 'பிற்கால வேதமொழி' எனப்படும். உபநிடதங்கள், இதிகாச புராணங்கள் இதிலேயே இயற்றப் பட்டன. இவற்றினிடையே வேதமொழிக்கு யாஸ்கராலும் பிற்கால வேதமொழிக்குப் (பாஷா)பாணினியாலும் இலக்கணம் வகுக்கப்பட்டது.

பாணினியின் இலக்கணம் வேதமொழியி னடிப்படையில் அமைந்ததனாலும், ஆரியர் கிழக்கேசெல்லச்செல்லப்பேச்சு மொழி ஒரு புறமும் இலக்கிய மொழி மற்றொரு புறமும் ஆக இரு வேறு திசைகளில் வளர்ச்சி பெற்றதனாலும், கி.பி. 5-ம் நூற்றாண்டுக்குள் பேச்சு மொழி பாகதங்களாகவும் பாணினியின் இலக்கண அடிமையில் வளர்ந்த புதிய இலக்கண மொழி சமஸ்க்ருதம் ஆகவும் பிரிந்தன. சமஸ்க்ருதம் பிறப்பிலேயே பேசப்படாத செயற்கை மொழியாயிருந்ததன் காரணம் இதுவே.

வட இந்திய மொழிகளும் ஆரியமும்

வேதமொழி, வடமொழி உட்பட வடஇந்திய மொழிகளனைத்தும் இந்திய ஆரிய மொழிகள் எனப்படும். இந்தியாமுதல் ஐஸ்லாந்துவரை பரந்துள்ள பத்து நூற்றுக் கணக்கான ஆரிய மொழிகளிடையே இவை ஒரு பகுதியே யாகும். இந்திய ஆரியமொழிகளிடையே ஆரிய மொழிகளனைத்துக்கும் அடிப்படையான பல ஆதி-ஆரியச்சொற்களும் கருத்துக்களும் பண்பாடுகளும் உண்டு. அதே சமயம் இந்திய மொழிகள் அனைத்துக்கும் பொதுவான பல சொற்களும் பண்புகளும் கருத்துக்களும் உண்டு. இவற்றைப் பகுத்துணராமல் பலர் இந்திய ஆரிய மொழிகளில் கண்டதெல்லாம் ஆரியமாகவே இருக்கவேண்டும் என்று கண் மூடி நம்பி வருகின்றனர்.

வடமொழி வேதமொழி ஆகிய வற்றிலில்லாத (தேசிச்) சொற்கள் இன்றைய தாய்மொழிகளில் உண்டு. இவை ஆரியருக்கு முற்பட்ட இந்தியப் பழங்குடியினர்களின் சொற்க

ளாகவே இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இவற்றில் சிலவும் வடமொழி வேதமொழிகளின் சொற்களில் சிலவும திராவிடச் சொற்களே என அறிஞர் காட்டுகின்றனர்.

தவிர இதிகாச புராண காலங்களில் சிந்துநாடே ஆரிய பூமியாகவும் சிந்து, சரஸ்வதி ஆறுகளே புண்ணிய ஆறுகளாகவும் இருந்தன. இக்கால சமய நூல்களிலும் இலக்கணங்களிலும் கங்கைநாட்டு ஆரியத்தைக் கலப்பாரியம் என்றும் போலி ஆரியம் என்றும் கண்டித்தும் இழித்துரைத்தும் உள்ளனர். ஆனல் வடமொழிக் காலத்துக்குள் கங்கைநாடே (சிறப்பாகக் கங்கைமுனை இடைநாடே) ஆரிய அல்லது புண்ணிய பூமியாகவும் கங்கையே புண்ணிய ஆருகவும் இந்நாட்டில் வளர்ந்த இலக்கிய மொழியே சிறப்பான ஆரிய மொழியாகிய வட மொழி (ஸம்ஸ்க்ருதம்) ஆகவும் மாறின. தூய்மை மிகுந்த அல்லது கலப்புக் குறைந்த ஆரியமாகிய மேற்காரியம் புகழ் மங்கி மறைந்து குறைந்த அல்லது கலப்பு மிகுந்த ஆரியமாகிய கங்கைநாட்டாரியப் பண்பாடும் மொழியுமே இன்றுவரை ஆரியப் பண்பாடும் மொழியுமாக இந்தியாவெங்கும் வழங்குகின்றது.

மேற்கூறியவற்ருல் வேத மொழியினும் பிற்கால வேத மொழியும், அதனினும் வட மொழியும திராவிடக் கலப்பு மிகுதியுடையவை என்பது போதரும். திராவிடப் பண்புகள் மென்மேலும் மேம்பட்டதனுலேயே தாய் மொழிகள் ஒரு சில நூற்றண்டுக்கொரு முறை உருமாறி வந்துள்ளன. அவற்றில் இலக்கண வாழ்வு இல்லாத காரணத்தாலேயே அவை காலத்துக்குக் காலம் ஒரேபடி முறையில் மாறுபடுவதன்றி இடத்துக்கிடமும் மாறுபட்டுப் பல மொழிகளாயுள்ளன. வாழ்க்கைத் தொடர்பற்ற செயற்கை மொழியாகிய வடமொழியால் அவற்றைப் பிணைக்க முடியாது போயிற்று.

வட இந்திய ஆரியமொழிகள் ஆரிய அடிப்படையில் அமைந்த இந்திய (திராவிடர்) மொழிகளே என்பது இன்று தெளிவாக உணரப்படவில்லை யாயினும் எதிர்காலத்தில் நடுநிலையாராய்ச்சி இதனை வலியுறுத்திக் காட்டுவது உறுதி. உண்மையில் இந்தியா வரு முன்னரேகூடப் பாரசிக நாட்டிலேயே திராவிட ஆரியப் போராட்டமும் கலப்பும் தோடங்கிவிட்டதேன்னல் கூடும். பாரசீக ஆரியர்களின் தேவர் அசுரராகவும், அசுரர் தேவராகவும் கருதப்படும் முரண்பாடு இதற்குச் சான்று ஆகும்.

வடமொழியின் திராவிட தமிழ்ப் பண்பாடுகள்

வடமொழியின் சொற்களில் நூற்றுக்கு 80-க்கு மேற்பட்ட சொற்கள் ஆரியத்திற்குரியன வல்லவென்று திண்ணமாகக் கூறலாம். ஏனெனில் உலகில் இந்தியாவிற்கு வெளியேயுள்ள நூற்றுக்கணக்கான ஆரிய மொழிகளுடன் தொடர்புடைய பொதுச் சொற்கள் மட்டுமே ஆரியத்துக்கு உரியவை ஆகும். மேலும் ஆரியத்துக்கு முற்பட்ட உயர் நாகரிகம்திகழ்ந்த நாடுகளிலேயே ஆரியர் மொழி வளமும் பண்டைப் பெருமையும் அடைந்தனர். தேற்குலக

நாகரிகங்களுடன் தொடர்புகொள்ளும் வரை வட ஐரோப்பிய ஆரியர் நாகரிகத்தில் மிகக் கீழ்ப்படியிலேயே இருந்தனர்.

இந்தியாவினுள்ளே கூட வடமேற்கிலிருந்து கிழக்காகவோ தெற்காகவோ செல்லச் செல்ல நாகரிகம் உயர்வதையும், வடமொழிப் பண்பாடுள்ள இடத்திலிருந்து திராவிடப் பண்பாடு மேம்பட்டுள்ள இடம் நோக்கிச் செல்லும் தோறும் தாய்மொழி இலக்கியப் பழமையும் உயர்வும் பெறுவதும் காணலாம். எனவே இந்திய ஆரியம் என்பது திராவிட ஆரியம் அல்லது ஆரிய திராவிடமேயாகும் என்பதும், வடமொழி ஆரிய அடிப்படையிலமைந்த திராவிட மொழியேயாம் என்பதும் ஆய்ந்துணரத்தக்கன.

வடமொழி இலக்கியத்துக்கு முற்பட்ட காலம்: வேதமொழி

வடமொழி இலக்கியத்துக்கு முன்னிட்ட காலத்தில் வேதங்கள், பிரமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள, சுமிருதிகள் வேதாங்கங்கள், இலக்கணங்கள் ஆகியவை இயற்றப்பட்டிருந்தன. வேதகாலத்தில் எழுத்துமுறை ஏற்படாததால் பாடல்கள் வாய்மொழியாக ஒப்புவிக்கப்பட்டன. இதனாலேயே வேதங்கள் வாய்மொழி (ஆகமம்) எனப்பட்டன. இவற்றுள் பிற வேதங்களனைத்தும் இருக்கு வேதத்தின் திரிபுகளும் விளக்கங்களுமேயாகும். இருக்குவேதம் இயற்கைப் பாடல்களின் திரட்டாதலால் உலகின் நாடோடிப் பாடல் இலக்கியங்களுடன் ஒப்பிடத்தக்க கலைச் சிறப்புடையது. தவிர பிற்கால வேதமொழி இலக்கியம்போல வரையறையின்றி இடைச் செருகலும பெருக்கமும் குறுக்கமும் மாற்றமும் இதில் இல்லையாதலால் அக் கால நிலைகளை அறிவிப்பதிலும் இது சிறந்ததாகும்.

வேதங்களில் யசுர்வேதமும் பிரமணங்களும் உபநிடதங்களில். சிலவும் உரைநடையிலுள்ளன. உலகின் மிகப் பழமையான உரைநடை என்ற சிறப்பு இவற்றுக்கு உண்டு. ஆரணியகங்களும் உபநிடதங்களும் ஆரியப் புரோகிதருக்கு நாடெங்கும் எழுந்த எதிர்ப்பியக்கங்களைச் சுருங்கிய அளவில் படம பிடிப்பதாகும். பாரசிகத்தில் எழுந்த ஜரதுஷ்ட்ரர் சீர்திருத்த இயக்கம் இதற்கு முன்னோடியாகவும் இன்று வரை தமிழ் நாட்டில் இயங்கும் தமிழ் இயக்கம் இதன் பின்னோடியாகவும் கொள்ளத்தக்கன. இவை இலக்கியமல்லவாயினும் இலக்கிய அறிஞர்களால் வடமொழி யிலக்கியத்திலே காணக் கிடைக்காத எளிமையும் அறிவுத்திறமும் உடையவை.

கதம்ப நூல்கள்

பாரதம் 5000 பாடலில் தொடங்கி 100,000 பாடலாக விரிவடைந்த 'காலங்கண்ட' நூல். இதனை ஒரு புலவர் ஒரு காலத்தில் எழுதினர் என்பதில்லை. ஆயிரக்கணக்கான பேர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் எழுதிச் சேர்த்துக் கூட்டியும் குறைத்தும திரித்தும் வளர்த்த கதம்பம் இது. வேதங்களுக்குப் பிற

பட்டு 5-ம் நூற்றாண்டுவரையுமுள்ள எல்லா நூல்களுக்கும் இப் பண்பு பொருந்துவதாகும். புராணங்கள் சுமிருதிகள் இவ் வகையில் இதிகாசங்களை விடச் சீர்கேடுடையவையாகும். பதினெண் புராணங்களில் சேராவிட்டாலும் அவற்றினும் புகழடைந்துள்ள பாகவத புராணம் கி. பி. 10-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது.

இராமாயணம் ஒன்றுதான் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் ஒரே புலவனால் இயற்றப்பட்ட பிற்கால வேதமொழி நூலாகும். இதில்கூட முதல்காண்டமும் இறுதிக் காண்டமும் பின்னால் சேர்க்கப்பட்டன என்று தெரிகிறது. தவிர கிடைக்கும் பதிப்புக்கள் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. நூலினுள்ளேயே கூறப்பட்ட செய்யுள் தொகை இயல் தொகை நூலுடன் ஒத்துவரவில்லை. ஆசிரியராகிய வால்மீகியின் கதையும் அவர் பாடல்களாகச் சிலவும் நூலில் வருவதிலிருந்து முற்கால வால்மீகி வேறு. இன்றைய இராமாயண வால்மீகி வேறு என்று அறிகிறோம். இன்றைய இராமாயண வால்மீகி கி. மு. 2-ம் நூற்றாண்டில் இருந்தவர். ஏனெனில் அந் நூற்றாண்டிலேயே கோசலத்தின் பழய தலைநகரான சாகேதத்தைப் புஷ்யமித்திர சுங்கன் என்ற மன்னன் தன் தலைநகராக விரிவுபடுத்தி அதற்கு அயோத்யா (வெல்லப்படாத நகரம்) என்று பெயர் கொடுத்தான். இந் நகரே இராமன நகராக வால்மீகி இராமாயணத்தில் புனைந்துரைக்கப்படுகிறது.

இலக்கிய காலத்துக்கு முற்பட்டவராகக் கருதப்படும் ஆசிரியர்களுள் மூவர் நூல்கள் ஆராய்ச்சியாளரால் ஏற்றுக்கொள்ளப் படாதவையாயுள்ளன. ஒன்று பரதர் நாட்டிய சாஸ்திரம். இன்றைய வடிவில் அது கி. பி. 6-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பதில் ஐயமில்லை. ஆனால் இது தொடக்கத்தில் 36 செய்யுள்களாக இருந்து 37 இயல்களாகிப் பெருகிய நூல். இன்று இது தென்னாட்டிலேயே வழக்கிலும் உள்ளது. முதலாசிரியராகிய பரதமுனிவர் கி. மு. 7-ம் நூற்றாண்டுக் குரியவர் எனக் கூறப்படுகிறது. இது போன்ற மற்றொருநூல் சாணக்கியன் அர்த்த சாஸ்திரம். சாணக்கியன் சந்திர குப்தரின் அமைச்சன் என்று கூறப்படுகிறான். அப்படியாயின இது கி. மு. 4-ம் நூற்றாண்டுக்குரியதாக வேண்டும். ஆனால் சந்திரகுப்தன் காலத்தில் அவன் அவைக்கு வந்திருந்து இந்தியாவைப்பற்றி யெழுதிய மெகஸ்தனிஸ் இவர் பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. முதல் முதலில் இவர்பற்றிய வரலாறு கி. பி. 8-ம் நூற்றாண்டுக்குரிய முத்ராராக்ஷஸ நாடகத்தில்தான் குறிக்கப்படுகிறது. நூலின் நடையும் பிற்காலத்தது. இக்காலத்த

தென்று கருதப்படும் மற்ெருரு ஆசிரியர் பாஸன். காளிதாசன் பாஸனைப்பற்றிக் குறிப்பிடுவதால் இவன் காளிதாசனுக்கு முற்பட்டவன் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவன் கி. பி. 2-3ம் நூற்ருண்டினனுகவே இருத்தலும் கூடும். அணிமையில் அறிஞர் டி. கணபதி சாஸ்திரியால் திருவனந்தபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட 13 நாடகங்களும் பல காரணங்களால் பாஸனுடையவை என்று சிலரும் அன்று அன்று என்று வேறு சிலரும் வாதாடுகின்றனர். கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் மலையாள நம்பூதிரிகளால் எழுதப்பட்டவையே என்பர் சிலர். எப்படியாயினும் இவை கி. மு. 4-ம் நூற்ருண்டுக்குரியவையல்லவென்பதை இந்நூல்களின் நடையும் கருத்துக்களும் அவற்றின் தென்னுட்டுநாடக மரபுகளும் காட்டுகின்றன. வடநாட்டில் புத்த சமய நலிவுக்குப் பின் தோன்றிய புராணக் கருத்துக்கள் தென்னுட்டில் சங்ககாலங்களிலிருந்தே காணப்படுகின்றன. ஆகவே அவை தென்னுட்டு நூலாகக் கொள்ளப்படலாமானல் கி. பி. 2-9 நூற்ருண்டுகளுக்குட்பட்ட நூல்களாக இருக்கக்கூடும்.

வடமொழியின் கருநிலைக் காலம்

கி. மு. 2ம் நூற்ருண்டுக்கும் கி. பி. 5-ம் நூற்ருண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை வடமொழியின் கருநிலைக்காலம் என்னலாம். இக் காலத்திற்கு முன் புத்த சமயத்தினர் தொடக்கத்தில் பாளி மொழியிலேயே எழுதி வந்தனர். ஆனுல் இதுபோது அவர்கள் புராண மொழியைப் பண்படுத்தி அதில் எழுதத் தலைப்பட்டனர். ஆயினும் அவர்கள் பாணினியை முற்றிலும் பின்பற்ருமல் தாய்மொழிகளிலிருந்து முற்றிலும் விலகிவிடாமல் இருந்ததனுல் இவர்கள் காலமொழி முற்றிலும் வடமொழியாய் அமையவில்லை. இதனை வடமொழி என்று கொள்பவர் இதில் பாளி மொழிக் கலப்பு மிகுதி என்று கூறுவதன் காரணம் இதுவே.

வடமொழி இலக்கியத்திற்கு முன் மாதிரியாய் அமைந்த இப் புத்தகாலக் கருநிலை இலக்கியத்தின முதற் கவிஞன அசுவகோடின் ஆவான். இவன் கி. பி. 1 அல்லது 2ம் நூற்ருண்டிலிருந்த புத்த அரசன் கனிஷ்கன் அவைப் புலவன் (சிலபபதிகாரத்திற்குறிக்கப்பட்ட கனகன் இவனே என்பர்) இவன் புத்தசரிதம், சௌந்தரானந்தம் என்ற இருகாவியங்களும் மூன்று நாடகங்களும் எழுதியதாக அறிகிருேம். நாடகங்களின் சில பகுதிகள மட்டுமே அண்மையில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளில் கிட்டியுள்ளன. புத்த சரிதம் வடமொழியாளரின் காவியப் பண்புகள் முழுவதும் அமையப் பெற்ற பெருங்காவியமாகும். அதே சமயம் காளிதாஸன் நடையிலும் எளிமையுடைய தாய்க் கிட்டத்தட்டப் புராண நடையிலேயே அது அமைந்துள்ளது. இந்நூல் கி. பி. ஆரும் நூற்ருண்டில் சீன மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தது. தற்காலத்தில் ஸர் எட்வின் ஆர்னுல்டு என்ற ஆங்கிலக் கவிஞர் இதனைத் தழுவி ஆசிய ஒளி (*Light*

of Asia) என்ற ஆங்கிலப் பெருங்காவியம் எழுதியுள்ளார்.

இக் காலத்திலேயே காஞ்சிபுரம் இந்தியாவின் சமயப் போராட்டக் களமாகவும் வடமொழிக்கலையின் வளர்ப்பிடமாகவும் ஆயிருந்ததென்று மணிமேகலை மூலம் அறிகிறோம். கி. பி. 4-ம் நூற்றாண்டில் காஞ்சியில் வாழ்ந்த திங்-நாகனின் தருக்க நூல்களும் பின் நாட்களில் காஞ்சியிலிருந்துசென்று வடநாட்டுப் பல்கலைக் கழகமாகிய நாலந்தாவில் தலைவராயிருந்த தர்ம பாலரின் புத்த சமய நூல்களும் ஆசியாவெங்கும புகழ்பெற்றவை. வடநாட்டில் இதே போல நாகானந்தன் நூல்கள் பெருமையுடையன. ஆனால் இலக்கியத்துறையில் இககாலத்துக்குரியசிறந்த நூல் கி. பி. 2 அல்லது 3ம் நூற்றாண்டுக்குரிய சூத்திரகன் என்ற அரசன் இயற்றிய மிருச்சகடிகா (மண்தேர்) என்ற நாடகம் ஆகும். இதன் கதைப் புதுமை, நிகழ்ச்சி ஒழுங்கு, எளிய நடை, வாழ்க்கைத் தொடர்பு, பாமரமக்கள் வாழ்க்கையில் ஈடுபாடு ஆகியபண்புகள் வடமொழி நாடகங்களில் மிகவும் அரிதான பண்பாடுகள் ஆகும். எனவே மேனாட்டாசிரிகள் இதனைக் காளிதாசன் சாகுந்தலத்துக்கு அடுத்தபடி எடுத்துப் பாராட்டியதில்வியப்பில்லை. இது உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் இதனை 'மண்ணியல் சிறுதேர்' என்ற பெயருடன் மொழிபெயர்த்துள்ளார்.

[அடுத்த இதழில் முடியும்]





14. கரைகாணுத் துன்பத்தில் கண்ணகி

ஆய மகளிர் ஆடியும், பாடியும், துயர் மடிய வேண்டியும் நிகழ்த்திய குரவைக் கூத்திற்குப் பிறகு, மாதரி வைகை நதியிலே நீராடிச் சென்ருள். நாண்மலரும், நறும் புகையும், புனைசாந்தும் தூவியும், எடுத்தும், அணிந்தும் வைகைக் கரையிலே கண்ணனை வழிபட்டுத் திரும்பிய சமயத்திலே, மதுரை நகரத்துப் பெண்ணொருத்தி கூறிய வார்த்தை கேட்டு அஞ்சித் திடுக்கிட்டு அதைக் கூறத் துடித்து ஆயர்பாடி நோக்கி வந்தாள். அச்செய்தி ஆயர்பாடி முழுதும் அப்பொழுதே பரவிவிட்டது. வந்தவள் கண்ணகியைக் கண்டாள். வாயடைத்து நின்ருள். மௌனம் மிக நுட்பமாய்ச் சோகத்தை வெளிப்படுத்திச் சென்றது. கண்ணகியின் உள்ளத்திலே கனல் போலப் பிறந்து வந்த துன்பம் அவள் சொற்களிலே சுடர் தெறித்து அந்த மௌனத்தை முற்றிலும் கலைத்தது. சென்ற கணவன் திரும்ப வேண்டிய சமயம் வந்தும் அவன் வரவில்லையே என எண்ணிஞள். கலங்கிஞள். 'காரணம் இன்றி மனம் கலங்காதே!' என அருகிருந்த ஐயையை நோக்கிவினவுகிருள்.

காதலர்க் காண்கிலேன்
கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென்
நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென்
நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன(து) எவன்
வாழியோ தோழீ!

வைகைக்கு நீராடச் சென்று வந்த மாதரி வாய் பேசாது நிற்பதும், காதலரைக் காணுமையால் உள்ளம் கலங்கி உருகுதற்கும் யாதோவொரு தொடர்பிருப்பதாய்க் கண்ணகி எண்ணுகிருள். அல்லாமலும் ஆங்காங்கே கூடிக் கூடிப் பேசும் ஆயமகளிர் பேச்சிலே இதற்கான காரணமிருப்பதாய் நினைக்கிருள். நினைத்து நினைத்துக் கலங்குகிருள்.

கண்பகற் போதே நடுக்குநோய்
கைம்மிகும்
அன்பனைக் காணு அலவுமென்
நெஞ்ச ன்றே
அன்பனைக் காணது அலவு
மென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன(து) எவன்
வாழியோ தோழீ

ஆயர்பாடி யிலிருந்து காதலன் பிரியும் நேரத்திலேயே கண்ணகியின் உள்ளம் கலங்கி விட்டது. 'வந்துவிடுவான்' என்ற வார்த்தை இருந்து உள்ளத்தைத் தேற்றி வந்தது. நேரம் செல்லச் செல்ல அந்த நம்பிக்கையும் தேய்ந்து விட்டது. அன்பனைக் காணுத துன்பத்தால் 'இனி யாது நிகழுமோ? என்று நினைத்து அலைபாய்கிறது உள்ளம்.

தஞ்சமோ தோழி
தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு
மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு
மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்னது
எவன்வாழியோ தோழீ

'என் கணவரையோ நான் வரக் கண்டிலேன். எனக்கு அடைக்கலமாவார் அவர் நிலையில் யாருளர்? என் தலைவரை வஞ்சகப்படுத்திய செயலொன்று நிச்சயம் நிகழ்திருக்கிறது. அதனுல் என் மனமும் மருகி மருகி மயங்குகிறது. இதை எல்லாம் எண்ணிப் பார்த்தால் அயலார் பேசும் பேச்சிலே யாதோ இதற்கான காரண மிருப்பதாய்ப்படுகிறது. அவர்கள் கூடிக் கூடிப்பேசுவதுதான் என்ன? எனக்கு நீ அதைச்சொல்லமாட்டாயா?' என்று தவியாய்த் தவிக்கிருள், கண்ணகி.

ஆயமகளிர் கண்ணகியைப் பார்க்கின்ற பொழுதெல்லாம் 'அந்தோ, இவளுக்கா இத் துன்பம் வரவேண்டும்? என்ன அழகு, எத்தகைய இளமை, எவ்வளவு உயர்ந்த குணம்? இம் மாதரசிக்கும் இத் துயரம் வரலாமா?' என்று பலவாறு தமக்குள்ளே பேசிக் கொள்ளுகிருர்கள். அவளருகு வந்து அதைச்சொல்ல அவர்கட்கு நா எழவில்லை. தனக்குச் சிறிது தூரத்தில் கூடியிருந்து பேசுவதையும் காதலன் வாராதிருப்பதையும் மனம் கலங்கி வருவதையும், எண்ண வைக்கும் இந்நிகழ்ச்சிகள் மேலும் மேலும் ஐயத்தை வளர்த்துத் துன்பததைப் பெருக்கிவிடுகின்றன.

இப் பகுதியில் ஆசிரியர் கண்ணகியின் சோகம் படிப்படியாய் வளர்வதை மிகநன்ருகக்காட்டுகிருர். இனி அவைகளைக் கவனிப்போம். காதலரைக் காணுமையால் நேர்ந்த கலக்கம் உள்ளத்தில் புகைந்து எழுந்து கொல்லன் ஊதுகின்ற உலைக்களத்துத் துருத்திபோலக் கண்ணகிக்குப் பெருமூச்சு வெளிப்பட்டு வருகிறது என்று கூறுகிருர். அடுத்த பாடலில் கோவலன் பிரிந்த பொழுதிலே முன்பு கூறிய கலக்கம்மட்டுமல்லாது, நடுக்கமும் பிறந்து விட்டதை உணர்த்துகிருர். 'கலங்கினுள்', 'நடுங்கினுள்' என்று கூறியவர் மூன்ருவது பாடலிலே 'மயங்கினுள்' என்று கூறிப் படிப்படியாய் அத்துயரத்தின் வளர்ச்சியைக் காட்டுகிருர். இவை மூன்ருலும் பிறர் பேசிய பேச்சாலும் கண்ணகி எண்ணிவிட்ட முடிவைக் கவி நமக்குக் காட்டுகி

ளூர். 'கணவனை வஞ்சகப்படுத்திய செயலொன்று நிகழ்ந்துளது' என்பதே அவள் முடிவாகக் கொண்ட எண்ணமாகிறது. வஞ்சகமாய்க் கணவன் கொலைப்பட்ட செய்தியை அறியுமுன்பேயே வஞ்சனை நிகழ்ந்துள்ளது எனக கண்ணகி எண்ணினளாயின் அவளது அறிவு மேம்பாட்டிற்கு ஒப்பென ஒரு பொருள் காண்பதும் அரிதாகி விடுகிறது.

இப்பாடல்களிலுள்ள சொற்கள் ஒவ்வொன்றும் கண்ணகியின் கலங்கிய துன்பத்தைக் கண்ணுக்கு மெய்யாய்க்காட்டி நம் உள்ளத்திலும் புகுந்து அவளை நமக்கு உறவாகக்கி நம் கண்ணிலும் நீரைப் பெருக்கி விடுகின்றன அல்லவா?

இந்த நிலையில் கோவலன் கொலைப்பட்ட செய்தியைக் கூறுவதிலே ஐயைக்கு அவ்வளவாகக் கஷ்டமில்லாமல் போய் விடுகிறது. எனவே கண்ணகியை நோக்கி 'உன்னுடைய கலக்கம் உண்மையானதுதான். ஐயோ' என்று கையைநெறித்து, 'பாண்டியன் அரண்மனையிலே சிலம்பு திருடிய கள்வனென்று கோவலனைக் காவலர் கொலை செய்யக் கருதினர்' என்று நடுநடுங்கிக் கூறினாள். கொலை செய்தனர் என்று கூறினால் கண்ணகி கேட்டவுடனேயே தன் உயிரை விட்டுவிடக் கூடுமோ எனஎண்ணிய ஐயை இதமாய்க்'கொலை குறித்தனர்' என நயமாய்க் கூறுகிறாள்.

அரை சுறை கோயில் அணியார்
நெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனம்
என்றே
குறை கழல் மாக்கள் கொலை
குறித்தனரே

என்று கூறுவதிலே கொலையாளர்களை மனித உணர்வு இழந்துபோன மிருகங்கள் என்ற கருத்திலே 'மாக்கள்' என இகழுகிறாள். இங்ஙனம் கூறியவுடனேயே

பொங்கி எழுந்தாள் விழுந்தாள்
பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம்
கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்
தன் கேள்வனை
எங்கணு என்னு இனைந்தேங்கி
மாழ்குவாள்

சினம் பொங்கிவிட்ட காரணத்தால் கண்ணகி சீறி எழுந்தாள். நிலத்திலே விழுந்தாள். செவ்வரி படர்ந்த கண்கள் சிவக்க அழுதாள். கணவனை எண்ணி 'எங்குள்ளாய்? எங்குள்ளாய்?'என்று புலம்பினாள்.

'பொங்கி எழுந்தாள்' என்ற சொற்களிலேயே கவிஞனின் உள்ளமும் கண்ணகியின் உள்ளமும் இரண்டிறந்த ஒன்றாகி விடுகின்றன. அதனாலேதான் உள்ளுணர்ச்சியை அவ்வளவு நன்றாகப் புலப்படுத்த முடிகிறது.

எழுந்தவள் நிலத்திலே விழுந்தாள். இருண்ட கருங்கூந்தல் கட்டுக் கலைந்து நிலத்திலே பரவியது. அதனிடையே அவளது திருமுகமும் புதைந்து கிடக்கிறது என இவ்வாறு இளங்கோ நமக்குச் சொல்லவில்லை. கரிய வானத்தில் மிதந்த வெண்ணிலவு முகிலோடு பெரிய நிலத்திலே வேரறுந்து விழுந்து விட்ட

காட்சியைக் காட்டி மேற் குறித்த நிகழ்ச்சியை உணர வைக்கிருர். என்ன அற்புதம்! எத்தகைய சோகம்! சோகத்திலே செறிந்த அழகையும் கூறி நம் உள்ளத்திலே இரக்கம் வரச்செய்கிருர். வழிநடந்த ஒருவன் தலையிலே இடிவிழுந்தது போல இத்துன்பம் கண்ணகிக்கு ஏற்பட்டு விட்டது. செல்வமிழந்து, சிறப்பிழந்து, நாடுவிட்டு, நகர்விட்டு, உற்ருர் உறவினரை விட்டு, கணவனையே நம்பி காடுகடந்து நாடு அடைந்த கண்ணகி இறுதியில் துணைவந்த கணவனையும் இழந்து தனியளாய் நின்று தவிக்க நேர்ந்துவிட்டது.

'கண்ணே வருந்தாதே! இதோ சிலம்பை விற்று வருகிறேன்' என்று கணவன் மெல்ல அருகிருந்து அன்பு சொரிந்து கூறிய மொழிகள் எல்லாம் கனவிலே தோன்றி மறைந்த காட்சியாய்ப் போகின்றன.

இதுவரையிலும் இளங்கோ நமக்குக் கண்ணகியைப் பற்றிக் கூறிவந்தவைகளைச் சுருக்கமாய் நாம் நினைத்துப்பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பம் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. கண்ணகி தனக்கு ஒப்பில்லாத அழகுடையவள். செல்வச் சிறப்பிலும் அப்படிப்பட்டவள். வீட்டைவிட்டு வெளியே வந்தறியாதவள். அஞ்சத்தக்க இயல்புடையவள். அநுபவமோ ஒருசிறிதுமில்லாதவள். இவையே இளங்கோ நமக்கு ஆங்காங்கே கூறிவந்தவை. இத்தகைய குணமும் இயல்புமுடைய ஒருபெண் தன் கணவன் வஞ்சகமாய் அரசனல் கொல்லப்பட்ட நிலையில் யாது செய்யக்கூடும்? அரசனே அநீதி செய்தால் அதை யார் தண்டிக்க முடியும் என்று மலைக்கலாம். வேலியே பயிரை மேய்ந்தால் என்று சொல்லிப் பொறுப்பை மறக்கலாம். இல்லையானல் 'தெய்வமே நீ இருந்தால் கேள்' என்றுசொல்லிப் புலம்பலாம். 'எல்லாம அவன் செயல்' என்று சுலபமாய் எண்ணலாம். அல்லது 'பெண்ணாய்ப் பிறந்த நம்மால் ஆகாது. ஊருக்குப் போய் உற்ருர் உறவினரிடம் சொல்லி செய்யத் தக்கதைச் செய்யலாம்'என்று திரும்பலாம். அல்லது இதுபோன்ற ஒரு கையாலாகாத காரியத்தையே செய்திருக்கக்கூடும். அப்படித்தானே? ஆனல் கண்ணகி விதிவிலக்காய் நிற்கிருள். சென்ற கணம் வரையிலும் ஆன்றவிந்து கிடந்த சினம் சீறி எழுந்தது; எழுந்தவேகத்திலே அச்சம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. இதுகாறும் உயிரென நினைத்து வந்த ஒன்றை இழந்துவிட்ட நிலையிலே வஞ்சகத்தை வேரறுக்க, வந்த பெரும் பழி துடைக்க, நீதியை நிலைநாட்டக் கண்ணகி நினைத்துவிட்டாள். எனவேதான் மேற்குறித்த எண்ண மெதுவும் அவளுக்குத் தோன்றவில்லை. இதுகாறும் பாவையாய் அலங்கரித்துக் கூறப்பட்ட கண்ணகி இனி வீரபத்தினியாய் உருவாகிவிடுகிருள். சினத்திலும் கண்ணகி சிரிக்கிருள். இதோ பாருங்கள்:

இன்புறு தங்கணவர்
 இடர் எறியகம் மூழ்க
துன்புறு வன நோற்று
 துயருறு மகளிரைப் போல்

3

மன்பதை அலர் தூற்ற
மன்னவன் தவ(று) இழைப்ப
அன்பனை இழந்தேன் யான்
அவலங்கொண்(டு) அழிவலோ

'தம்மோடு இருந்து இன்ப முற்ற கணவன் நெருப்பிலே கிடந்து மூழ்கத் தாம் கைம்மை நோன்பு நோற்று, நதியிலும் நன்னீர்ப் பொய்கைகளிலும் நீராடி, அழுது அழுது பிறகு மறக்கின்ற பெண்டிரைப்போல நானொருத்தியாவேனோ?' என்று கூறுகிறாள். என்ன ஏசல்! எத்தகைய ஏளனம்! விதவைப் பெண்டிரைப்பற்றிக் கண்ணகி கொண்ட கருத்தைப் பாருங்கள்!

இத்தகைய விதவைப்பெண்டிர் கண்ணகியை நோக்கி நீயும் இனியொரு விதவைதானே என்று கேட்கலாம் அல்லவா? அப்படிக் கேட்பதாய் வைத்தே கண்ணகி விடையும் சொல்லுகிறாள். 'நானொரு விதவைப் பெண்ணல்ல நானொரு வீரப் பெண்' என்று மார்தட்டுகிறாள் சிலம்பு திருடிய கள்வன் என்று கணவன் கொல்லப்பட்டான். அதனால் உலகம் திருடன் மனைவி திருடிஎன அழைக்கும். எனவே அரசன செய்த அநீதியை உலகமறியச் செய்வேன். அதனால் இனி ஆராயாத ஒன்றை ஒரு அரசன் செய்யாதவாறு ஆக்கிவிடுவேன். வந்த பழியைத் துடைப்பேன்' என்று வீர வாசகம் பேசுகிறாள் கண்ணகி. ஆய மகளிர்களை நோக்கி நீங்கள் எல்லோரும் இதைக் கேளுங்கள் என்று கூறி:

பாய்திரை வேலிப்
படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே
கள்வனோ என்கணவன்?

'என் கணவன் நீ அறியக் கள்வனா?' என்று சூரியனை நோக்கிக் கேட்கிறாள். 'கள்வனல்ல. கள்வன் என்ற மதுரை நகரைத் தீயுண்ணும் என் றொரு குரல் கேட்கிறது. ஆ! என வியந்தனர் ஆயமகளிர். சினங்கொண்ட கண்ணகி சிலம் பேந்திய கையளாய்க் கலைந்த கூந்தலும் கசிந்த கண்ணீருமாய் அதோ மதுரைநோக்கிப் புறப்பட்டுவிட்டாள். இனி ஆயர்பாடியில் அவளுக்கு என்ன வேலை? அங்குள்ள ஆயர்களுக்குத் தன் கணவன் கள்வனல்ல என்பதைக்காட்டி விடுகிறாள். ஆயமகளிரின் அனுதாபமும் அவளைப் பின் தொடர்ந்து சென்றது.

என்றனன் வெய்யோன்
இலங்கிழை வளைத்தோளி
நின்றிலள்; நின்ற
சிலம்பொன்று கையேந்தி
முறையில் அரசன்தன்
ஊர் இருந்துவாழும்
நிறையுடைப் பத்தினிப்
பெண்டிர்கள் ஈதொன்று

'நீதி தவறிய பாண்டியனது நகரிலிருந்து வாழும் பத்தினிப் பெண்டிர்களே இதோ என் கையிலுள்ள இச் சிலம்பு வஞ்சகமாகக் கவர்ந்து கொள்ளப் பட்ட சிலம்பின் மற்றொன்றாகும். இதைக் காணுங்கள்.

'துன்பத்தைப் பெருக்குகின்ற இந்த மாலைக் காலத்திலேயே யாருமே அடையாத பெருந் துன்பத்தை யானடைந்துவிட்டேன், சிலம்பு விற்கவந்த என் கணவனை, சிலம்பு கவர்ந்த கள்வனஎன்று கூறிக் கொன்றார்களே! இது ஒரு பெரிய அநீதி இல்லையா? அன்பு நிறைந்த என்னருமைக்

காதலனை உயிரொடும் பொருந்திய உடலொடும் முன்புபோல நான் காண்பேன்'

காதற் கணவனைக்
கண்டால் அவன்வாயில்
தீதறு நல்லுரை
கேட்பேனே ஈதொன்று
தீதறு நல்லுரை
கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாளென்(று)
எள்ளல் இதுவொன்று

'காதற் கணவனைக் காண்பேன். அவனது அமுத வாய் திறந்து பேசும் இனிய மொழிகளையும் கேட்பேன், இது நிச்சயம். அப்படிக் கேளாது போவேனாயின் என்னை நீங்கள் இகழலாம். கள்வன் மனைவி என்றே கூறலாம்' என்று பலவாறு மதுரைநகர மகளிரை நோக்கிக் கண்ணகி பேசுகிறாள்.

இதைக் கேட்ட மதுரைநகர மக்கள் ஏக்கமும், கலக்கமும் அடைந்து 'நீக்கமுடியாத பெருந் துன்பத்திற்கு இவளை உள்ளாக்கி எந்நாளும் வளையாத செங்கோல் வளைந்ததே! இதற்கு யாது காரணம்' என ஒருவர் மற்றொருவர் முகம் பார்த்து மயங்கினர்.

அல்லலுற்(று) ஆற்றாது
அழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையார்
எல்லாரும் தாமயங்கிக்
களையாத துன்பமிக்
காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல்
வளைந்த(து) இதுவென்கொல்

என்றனர். ஏழை அழுத கண்ணீர் வீண் போகாது என நாம் இன்றளவும் சொல்லிவருகிறோம். இந்த எண்ணத்தில் பிறந்தது 'அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை' என்ற குறள். இக்குறளை இலக்கணமாகவைத்து ஆராய்ந்தால் 'கண்ணகி சிந்திய கண்ணீரும் அதன் விளைவால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் கும் ஏற்ற இலக்கியமாய் உருவாகி இருப்பதை உணரலாம். 'தேய்க்கும்' என இக்குறளின் இறுதியிலுள்ள சொல்லின் ஆற்றலை மதுரையின் சோகமயமான அழிவிலே நாம் காணுகிறோம் அல்லவா? இதுவல்லவோ இலக்கணம்! இதுவல்லவோ இலக்கியம்!

கண்ணகியைக் கண்ட இன்னும் சிலர் அவள் கையிலே சிலம்பும். கண்ணிலே புனலும் முகத்திலே விரிந்த கனலும் கருங் கூந்தலுமாய்ப் பொருந்தக் கண்டு 'புதியபெருந் தெய்வமோ! யாது நிகழுமோ!' என நடுங்கினர்.

செம்பொற் சிலம்(பு)ஒன்று
கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம்
வந்த(து) இதுவென்கொல்!

என்றனர். மற்றும் சிலர் கலங்கிப் புலம்பிக் கண்ணீர் சொரிந்துவரும் இவள் 'யாதேனுமொரு தெய்வம் வரப்பெற்றவளோ மேல்விளைவதுதான் யாதோ' என அறியமாட்டாது

ஐயரி உண்கண்
அழுதேங்கி அரற்றுவாள்



தெய்வமுற்றாள் போலும்
தகையள் இதுவென்கொல்

என அஞ்சினர். இவ்வாறு தலைவிரி கோலமாய் வந்த கண்ணகிக்குக் கோவலன் கொலைப்பட்ட இடத்தை மதுரை மக்கள் கூட்டிப்போய்க் காட்டினார்கள். காதலனைக் கண்டாள் கண்ணகி. இல்லை. காணாத துன்பத்தையே காணுகிறாள்.

வண்டார் இருங்குஞ்சி
மாலைதன் வார்குழல்மேல்
கொண்டாள் தழீஇக்
கொழுநன்பால் காலைவாய்ப்
புண்தாழ் குருதி
புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்தன்னைக்
காணாக் கடுந்துயரம்

ஆயர்மனையிலே, காலைநேரத்திலே கணவன் மார்பிலே கிடந்த மாலையைத் தன் கூந்தலிலே சூடிக்கொண்ட கண்ணகி அதே கணவனது மார்பு மதுரை நகரிலே, மாலைப்பொழுதிலே இரத்த வெள்ளத்திலே நனைந்து கிடக்கக் காணுகிறாள். என்ன சோகம்! எடுத்து மார்போடு வைத்து மயங்குகிறாள்.

கண்பொழி புனல்சோரும்
கடுவினை உடையேன்முன்
புண்பழி குருதியராய்ப்
பொடியாடிக் கிடப்பதோ

காதலியின் கண்ணிலிருந்து வழிந்துவரும் கண்ணீரைக் கையால்மாற்றவேண்டிய கணவன் மாண்டுகிடக்க மாளாத துன்பத்தில் நின்று புலம்புகிறாள். நீதி மறைந்து அநீதி தலைநிமி

ரும் சமயத்திலே ஒரு நாடு எங்ஙனம் அறிவிழந்துபோகுமென்பதை இனிக் கண்ணகியின் மூலமாய் உணருகிறோம். ஒரு நாட்டின் நல் வாழ்விற்குப் பெண்டிரும் சான்றோரும் காரணமாவர். அதனாலேதான் 'இம்மதுரை நகரத்திலே பெண்டிர்களும் இருக்கிறார்களா? சான்றோர்களுமிருக்கிறார்களா? தெய்வமும் இருக்கிறதா?' என்று கண்ணகி கேட்கிறாள். ஒரு பெண்ணுக்கு வந்த துன்பத்தை, மற்றொரு பெண் கண்ணாற் கண்டிருந்தும் காவலனிடத்துச்சென்று இந்த அநீதியைச் சொல்ல வாயில்லாது போனமைபற்றி வருந்துகிறாள். 'நீதி நிலை தவறிப் போகின்ற சமயத்திலே அரசனால் அது விளைவதாயினும் அஞ்சாது கூறவேண்டிய சான்றோர் யாருமிங்கில்லையா' என்று வினவுகிறாள். இவர்கட்கெல்லாம் மேலாக ஏழை என்றும் அரசு என்றும் இரக்கங்காட்டாதுநீதியொன்றையேதனக்கு வடிவாய்க்கொண்ட தெய்வம் இந்த நகரத்தில் இல்லையா என்று பலவாறு சொல்லிச் சொல்லி அழுது கணவனது மார்பு பொருந்த வெட்டுண்ட உடலை எடுக்கிறாள். அதே சமயத்தில் உயிர்பெற்றெழுந்த கோவலன் கண்ணகியை 'நோக்கி நிறைமதிபோலும்உன் திருமுகம் வாடியதேன்?' என்று வாயாற்பேசித் தன் கையால் அவள் கண்ணீரைத் துடைக்கிறான்.

உடலொடும் உயிரோடும் பொருந்திய தன் கணவனைக் கண்ட கண்ணகி வியப்பும் திகைப்பும் அடைந்து எங்கும் போய்விடாதபடி அவன் கால்களைத் தன் கையால்பற்றிக் கொள்ளுகிறாள். அமரருள்ளே அவனொருவன் ஆகிவிட்ட காரணத்தால் 'நீ இருக்க, நான் செல்லுகிறேன்' என்று கோவலன் மறைந்துவிடுகிறான்.

> பழுதொழிந்து எழுந்திருந்தான்
> பல்லமரர் குழாத்துள்ளான்
> எழுதுஎழில் மலருண்கண்
> இருந்தைக்க எனப்போனான்

கணவன் மறைந்த நிலையிலே கண்ணகி 'இது மாயமோ, மருட்டுகின்ற தெய்வமோ, மற்றெதுவோ' என்று குழம்பிப் போகிறாள். 'நீ இருக்க நான் போகிறேன்' என்று சொல்லியதும் பொய்யோஎன்று புலம்புகிறாள். 'சினம் தணிந்தாலன்றி என் செல்வனைக் காண மாட்டேன்' என்று பேசுகிறாள்.

> மாயங்கொல் மற்றென்கொல்
> மருட்டியதோர் தெய்வங்கொல்
> போயெங்குத் தேடுவேன்
> பொருளுரையோ இதுவன்று
> காய்சினம் தணிந்தன்றிக்
> கணவனைக் கைகூடேன்
> தீவேந்தன் தனைக்கண்டுஇத்
> திறங்கேட்பல் யானென்றாள்

கொலைக்குக் காரணமான கொடுங்கோலரசனைக் கண்டு 'இதற்குக் காரணம்தான் யாது?' என அறிய எண்ணிய வளாய் நெடுங்கயற்கண் நீர் சோர, ஆறாத சினத்தோடு அரண்மனையை நோக்கிச் செல்லுகிறாள். ●

பாரதிதாசன் பரம்பரை

காலைக் காட்சி!

காலைக் கதிரவனின் —பொன்னொளி
காசினி மேற்பரவ
நீலக் கடலலைகள் —தங்கநிறம்
பெற்றுமே நீந்து தம்மா!

இரத்தினக் கம்பளமாய் —புற்றரை
எழில்மிகும் காட்சி தர
முத்துப் பனித்துளிகள் —அதன்மணி
முடிக ளாகுதம்மா!

பூவினத்தின் வனப்பும் —சிறுவனின்
புல்லாங் குழலிசையும்
ஆவின் மணியொலியும் —மகிழ்வை
ஆருய்ப் பெருக்குத்ம்மா!

வான வெளிதனிலே —முகில்கள்
வாகையுற்றுத் திரும்பும்
சேனையெனச் சென்றிடும் —காட்சியென்
சிந்தை கவருதம்மா!

பாடுபட்டே பிழைப்போம் —என்னுமனப்
பான்மையுள்ள மக்கள்
பீடு நடையழகைக் —கண்டுமனம்
பின்னும் களித்தேனம்மா!

சோலைக் குயிலிசையென் —காதினில்
தேனைச் சொரியவுமே!
ஞாலத் தழகனைத்தும் —கண்முன்னே
நாட்டிய மாடுதம்மா!

மதுரை மாவட்டத்தில் உள்ள **கோம்பை**யைச் சேர்ந்த தோழர் ச. சீத்தாராம் திருக்குறளிற் பற்றுடையவர். ''சிரான்'' என்பது அவர்தம் புனைப்பெயர். 'காலைக் காட்சி' அவரைப் பாரதிதாசன் பரம்பரையினர் ஆக்குகிறது. —ஆசிரியர்





உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

12. அம்மன்கோயில் அர்ச்சகர்

அர்ச்சகர் அம்மைநாத சாஸ்திரிகளைப் பற்றி வெளியுலகத்திற்கு அநேகமாகத் தெரியாது. அவரும் இந்த உலகத்தைப் பற்றி லட்சியமே செய்வதில்லை. அவருக்குத் தெரிந்த விஷயமெல்லாம் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெட்டுப் புராணங்கள் ...... இத்யாதிகள்தான். சாதியாவது மண்ணாங்கட்டியாவது என்று எத்தனை பேர் மண்டையை உடைத்துக் கொண்டாலும் சரி, அவரைப் பொறுத்தவரையில், "சூத்ராள் வேலையை எட்டிநின்று செய்ய வேண்டும். வைசியாள் கோவில் விளக்குகளுக்குத் தவறாமல் நெய் ஊற்றவேண்டும். க்ஷத்திரியாள் காவல் நிற்க வேண்டும். தான்மட்டும் ஆறுகால பூஜையும் அமர்க்களமாய்ச் செய்துமுடிக்க வேண்டும்" என்பதுதான் நியாயம் என்பார்.

அமெரிக்கா கண்டுபிடித்த அணுக்குண்டு பற்றி அவரிடம் கூறினால்கூட ஆச்சரியப்படவே மாட்டார். அலட்சியமாகச் சிரித்துவிட்டுக் கூறுவார்; "கலிகாலமோண்ணோ! அதான் உங்களுக்கு ஆச்சரியமாத் தோணுது. நம்ம பரமசிவனைப் பாத்தேளா! அவர் ஒரு சமயம் நெற்றிக் கண்ணைத் திறந்தார். திரிபுரமே அந்த க்ஷணத்தில் பஸ்மீகரமாப் போயிடுத்து. இந்த அணுக்குண்டு எம்மாத்திரம்!" என்று சொல்லிவிட்டு, என்றைக்காவது ஒருநாள் பரமசிவன் நெற்றிக் கண்ணைத் திறக்காமலா போகிறார், அப்பொழுது இந்த அணுக்குண்டின் பெருமையைத் தரைமட்டமாக்கிவிடுகிறேன் என்ற நம்பிக்கையில்சமாதானம் அடைந்து விடுவார்.

பாவம்! அவர் இன்னும் உலகம் தட்டையாக இருக்கிறது என்றுதான் நம்பிக்கொண்டிருக்கிறார். உலகம் உருண்டை என்றால் அதை எப்படி இரண்யாக்ஷன் பாயாகச் சுருட்ட முடியும் என்ற கேள்வியைப் போடுவார். இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு 'எந்தப் பயலாவது இதற்குப் பதில் சொல்லட்டும்' என்று சிர்

திருத்த வாதிகளைப் பார்த்துச் சிறுவார்.

அம்மைநாத சாஸ்திரியாருடைய வீடு அக்ரகாரத்தின் ஒரு கோடியில் அமைந்திருந்தது. அவர் ஒண்டிக்கட்டைதான். ஆயினும் அவரது விதவைத் தங்கை ஒருத்தி வீட்டு வேலைகளை எல்லாம் கவனித்துக் கொண்டு வந்தாள். அவருக்குக் கோயில் வருமானம் மட்டுமல்ல, இன்னும் 'பிரைவேட்' வரும்படியும உண்டு என்பது எனக்குப் பின்புதான் தெரியவந்தது. ஏனெனில் அந்தக் கோவிலில் பொட்டுக்கட்டி விடப்பட்ட 'பூம்பாவை' களுக்கு அவர்தான் மாப்பிள்ளையாகவும் மாமனாராகவும் விளங்கினர்.

வாடிக்கையாக வரும்'அதிதி' களில் சாதாரணப் பேர்வழிகளை மட்டும் அந்த 'அருந்ததி' களிடம் அனுப்பி வைப்பார். பசையுள்ளபேர்வழி என்றால் அவருக்குத் தன் வீட்டிலேயே 'இலவசமாகப்' 'படுக்கை வசதி'க்கு எற்பாடு செய்வார். இது மட்டுமல்ல, புதிய மாப்பிள்ளைகளைத் தேடிக்கொண்டு வரவும் அமமன கோவிலைச் 'சுயம்வர' மண்டபமாகப் பயன்படுத்திக்கொள்வார். இனிப்பைக் கண்டு இளித்துக் கொண்டு வராத ஈக்களும் உண்டோ? எனவே அவருக்கு வரும்படி அதிகப்படியாயிற்று.

நான் என் கல்லூரி வாழ்வை மறந்துவிட்டுக் காதல் வேட்டையிலே மும்மரமாக ஈடுபட்டிருந்த சமயந்தான், அம்மைநாதரைப் பற்றி அதிகம் தெரிந்து கொண்டேன். எனது காதல் முறிந்து போன நேரத்திலெல்லாம் மனச்சாந்திக்காகக் கோவிலில் வந்து கவலையற்று ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவேன் ஆண்டவனைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும், அவரைப் பூஜிப்பவர்களுக்கு எப்பொழுது உதவி அவசியமோ, அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிடுவார் என்பதுமட்டும எனக்குத் தெரியும். இது என்பரந்த அனுபவத்தில் கண்ட பெரிய விஷயம். ஆண்டவன்மேல் எனக்கிருந்த நம்பிக்கை பித்தளை மெருகைப்போல வரவரக் குறைந்து கொண்டே வந்து கடையில் கறுத்துப்போனதற்குக்கூட இதுதான் காரணம்! ஏனெனில் கோவிலில் நான கண்ட கோதையை என்கூட அழைத்துச் செல்கையில் ஏற்பட்ட ஆபத்தைத்தடுக்க எத்தனையோ தெய்வங்களை வேண்டினேன். அம்மையப்பனிடம் அடைக்கலம் புகுந்தேன். அவர் 'பிள்ளைகளை'க் கெஞ்சினேன். ஆனால் ஒருவராவது வாயைத் திறக்கவேண்டுமே!

பரமசிவனைவிடப் பக்தர்களுக்கு அவர் பத்தினிதான் மிகவும முக்கியம். அப்பனுடைய அருளைவிட அம்மையின வரப்பிரசாதம்தான் அதிகச் சிலாக்கியம். மாணிக்க வாசகர் கூட. "அம்மையே, அப்பா என்றுதானே பாடினர். எந்தக் கோவிலிலும் அம்மன் சன்னதியில்தான் அதிகக் கூட்டமிருக்கும். சுவாமி சன்னதியை யாரும சிந்துவதில்லை. அப்படியிருக்கையில் நானும் அமமன கோவில் பிராகாரத்தின் ஒரு மூலையை எனக்காக 'ரிஸர்வ்' செய்துகொண்டதில் ஆச்சரியமில்லை அல்லவா?

ஒருநாள் வெள்ளிக்கிழமை. சன்னிதியில் ஒரே கூட்டம். பக்தர்கள் திருப்புகழைப்பாடிய வண்ணம் திரள் திரளாக வந்து கொண்டிருந்தனர். அன்று பெண்கள் கூட்டம் விசேஷம்! கோயிலின் நிலைவா சலோ மிகவும் குறுகல்! அதன் வழியாகத்தான் பெண்களும் சென்று மீளவேண்டும். அப்போது ஏற்படும் உரசல், மோதல், முனங்குதலுக் கெல்லாம் ஆண்டவன் பொறுப்பாளியா? அவன் சந்நிதியிலே அனைவரும் சமமல்லவா? ஆணாவது பெண்ணாவது! ஆண்டவனே அர்த்தநாரீஸ்வர ரூபத்தில் காட்சி யளிக்கின்றானே! ஆயினும் அகிலாண்டேஸ்வரியின் திருச்சன்னதியிலே தாய்மார்கள் படும் பாட்டை அவள் பார்த்தாளோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அதற்காக அவள் ஒரு பொட்டுக் கண்ணீர் கூட விட்டதில்லை!

நான் அன்றைக்குக் கோயிலிலுள்ள தாமரைக்குளத்திலே கைகால்களைச் சுத்தம் செய்து விட்டுக் கரையேறி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது மேல்படியிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த ஒரு 'மேனகா' கால் இடறிக் கீழே விழுந்தவள், அதிர்ஷ்டவசமாக என் கையில் சிக்கினாள். குளத்திலே விழுந்து விடாதபடி அவளை லாகவமாய்க் கைப்பற்றி (காப்பாற்றி) ஒரு நிலையில் நிறுத்தினேன். அவள் கண்கள் நன்றியைக் காட்டின. எனக்குக் காதலை ஊட்டின. ஆனால் அடுத்த விநாடி அவள் கூட்டத்திற்குள் ஓடி மறைந்துவிட்டாள். ஒரு நீண்ட பெரு மூச்சுடன் சுற்றுமுற்றும் பார்த்தேன்! அப்பப்பா! பக்கத்தில் நின்ற வாலிபர்களும் எட்டி நின்ற காளைகளும் என்னைப் பார்த்த பார்வை! அதில்தான் எத்தனை ஏக்கம்!! எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்திருக்கக் கூடாதா என்று ஒவ்வொருவருக்கும் நினைப்பு! என்ன உலகமய்யா இது?

கூட்டத்தில் மறைந்துவிட்ட 'கோகிலம்' என் உள்ளத்தையும் சேர்த்துக்கொண்டு போய் விட்டதால் அதைத் திருப்பிப் பெறுவதற்காவது அவளை மறுபடியும் சந்திக்க வேண்டியிருந்தது. ஆகவே அவளைத் தேடிக்கொண்டு கோயிலுக்குள்ளேயே திரிந்தேன். எங்கும் காணவில்லை. ஏமாற்றமடைந்த நான் கோயிலின் தலைவாசலில் நின்றுகொண்டு வெளியேறும் மாதர்களைக் கவனித்தேன், அந்த மங்கையைத் தவிர மற்றவர்கள் எல்லாம் என் கண்களுக்குத் தென்பட்டனர். ஆத்திரம் எனக்கு ஆற்றுவெள்ளம் போல வந்தது. கண்ணுக்கெட்டியது என் கைக்கு எட்டவில்லையே என்ற கவலையோடு கடைசியாக அம்மனைக் காணச் சென்றேன்.

என்ன ஆச்சரியம்! என்னால் காப்பாற்றப்பட்ட அந்தக் 'கன்னிகா' அர்ச்சகர் அம்மைநாத சாஸ்திரிகளுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். என்னைப் பார்த்தவுடன் அந்தப் பாவை கண்களிலே தனது களிப்பைக்-காட்டிப் புன்சிரிப்பு ஒன்றைத் தூதாக அனுப்பினாள். அது என்னை 'அந்த

4

இடத்தை விட்டுப் போய்வி டாதே' என்று எச்சரிக்கை செய்தது. சாஸ்திரிகளும் என்னைச் சாங்கோபாங்கமாகக் கவனித்தார். கூட்டம் குறைந்தது. சாஸ்திரிகள் திருநீற்றுத் தட்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். கையை நீட்டினேன். திருநீற்றைத் தந்துவிட்டு என்னை ஏற இறங்கப் பார்த்தார். லேசாகக் கனைத்துக்கொண்டு, "என்னய்யா! கூட்டத்தில் நின்றுகொண்டு இப்படி விறைக்க விறைக்கப் பார்ப்பது! நாலு பேர் கண்டால் என்ன நினைப்பார்கள்?" என்றார்.

நாலு பேர் பார்த்து எதை வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். அதைப்பற்றி எனக்கென்ன கவலை? இப்பொழுது சாஸ்திரிகளே சரணம் என்று கிடந்தேன். அவரும் 'தேவி'யின் திருவருள் எனக்குக் கிடைக்குமாறு செய்தார். தேன் குடத்தில் விழுந்த வண்டானேன் நான்!

அவள் நான் எதிர்பார்த்திருந்தபடி பலருக்கும் இடம் கொடுக்கும் பரத்தைதான். கோயிலுக்கென்று 'ரிஸர்வ்' செய்து விடப்பட்ட தேவதாசி அவள். ஆயினும் இளமையின் முறுக்கேறிய ஏந்திழை! எழிலுக்கு இருப்பிடம்!

தாசியாயிற்றே என்று நான் சஞ்சலப் படவில்லை. சமுதாயம் அவளுக்குச் சன்மானமாகத் தந்த தாசிப் பட்டத்தை ஒழித்துக் கட்டி, அவளோடு வாழ்க்கை நடத்துவதென்று தீர்மானித்தேன். லேசாக என் கருத்தை அவளிடம் தெரிவித்தேன். முதலில் மருண்டாள்.

"கேவலம் விபசாரியுடனா வீட்டு வாழ்க்கை நடத்தப் போகிறீர்கள்?"

"நீயும் விபசாரியாகவே உன் வாழ்நாளைக் கழிக்கப் போகிறாயா?"

"இல்லை! என் தலைவிதி அப்படியிருந்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?"

"விதி என்பது வீண் பேச்சு! கோழைகள் கூறும் குறுக்கு வாதம்! அதை விட்டு விடு! என்னோடு வா! உன் தலைவிதியை மாற்றியமைக்கிறேன்! நான உன் பிரம்மா!"

"சமுதாயம் உங்களைத்தான் நிந்திக்கும்."

"சமுதாயம் யாரைத்தான் எதற்குத்தான் நிந்திக்காமலிருக்கிறது? சமுதாயத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதானால் உலகம் ஒரு அடி கூட முன்னேற முடியாது."

"என்ன இருந்தாலும் இல்லாத இந்த வழக்கத்தை உலகம் ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகந்தான்". "உன்னையும் என்னையும் பார்த்தாவது உலகம் திருந்தட்டும்' கடைசியில் அவள் என்னுடன் ஓடி வரச் சம்மதித்துவிட்டாள். ஆனால் உலகம் அதற்காவது வழி விடுகிறதா? நாசகார உலகம் எங்களை நயவஞ்சகமாய்க் காட்டிக் கொடுத்து விட்டது.

நான் அம்சாவோடு (அதுதான் அவள் பெயர்) பழகுவதைக்கண்டு சாஸ்திரிகளுக்கு ஆரம்பத்தில் சந்தோஷம். ஏனெனில் அப்பொழுதுதான்

கடைசியாக மிஞ்சியிருந்த கால் வேலி நிலத்தை விற்ற பணம் என் கையிலிருந்தது. உடை விஷயத்தில் மட்டுமல்ல, அம்மைநாதர் விஷயத்திலும் நான் டாம்பீகமாய்த்தான் நடந்துப் கொண்டேன். அவருக்கு பரம திருப்தி! குட்டிக்கேற்ற ஜோடி என்று அம்சாவைக் கிண்டல் செய்வார்.

அம்சா என்னோடு வரச் சம்மதித்த பிறகு நான் என் சொந்த லாபத்தைக் கருதி அம்மைநாதர் விஷயத்திலே கொஞ்சம் சிக்கனமாக நடந்துகொள்ள ஆரம்பித்தேன். வரவரப் புன் சிரிப்பு வரண்ட சிரிப்பாக மாறியது. பிறகு என்னைக் கண்டாலே காணாதது போல் இருந்து விடுவார். இந்த நிலையில் அம்சாவை ஒரு ஆத்துப் பட்டி ஜமீன்தாருக்கு ஏற்பாடு செய்து வைத்திருப்பார் என்று கனவிலும் கருதவேயில்லை.

ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி ஊரைவிட்டு ஓடுவதற்காக அம்சாவும் நானும் ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபொழுது அங்கு அம்மைநாத சாஸ்திரிகளைக் கண்டதும் எனக்குத் திக்கென்றது. ஜமீன்தார் தன் மீசையைத் திருகிவிட்டுக்கொண்டிருந்தார். அவருடைய மூன்று முரட்டு ஆட்கள் என்னை முற்றுகை போட்டுக்கொண்டு நின்றார்கள்.

அடடா! கிளம்பும்பொழுது அம்சா எத்தனை தெய்வங்களை அர்ச்சனை செய்துகொண்டு வந்தாள். நானுங்கூட ஆபத்து வந்துவிடக் கூடாதே என்பதற்காக ஆயிரங் கடவுள்களின் பெயர்களையும் நாமாவளி பண்ணிக்கொண்டு வந்தேன். என்ன செய்து என்ன பயன்? அப்பொழுதே வீட்டு வேலைக்காரிக்குச் சிறிது பணம் கொடுத்து வைத்திருந்தால் விஷயம் வெளியாகி யிருக்குமா?

அமசாவைக் காரில் வைத்துக்கொண்டு அம்மைநாதரோடு ஜமீன்தார் சென்றுவிட்டார். இப்பொழுது 'முதல்' போனாலும் பரவாயில்லை, முதுகு புண்ணாகாமல் இருக்க வேண்டுமென்பது தான் என் கவலை.

இனி இந்த ஊர்ப் பக்கம் தலை காட்டுவதில்லை என்ற சத்தியத்தை வாங்கிக்கொண்டு என்னை விடுதலை செய்தார்கள் அந்தக் குண்டர்கள். நல்ல வேளை! அம்மன் கோயிலில் திருட்டுப் போன தாலி,யைத் திருடியதாக என் மீது 'அரஸ்ட் வாரண்டு' வராமலிருந்தது ஆச்சரியந்தான்! ஏனெனில் திருட்டுப்போன தாலி சாஸ்திரியாருக்கு நாலு வேலி நிலமாக மாறியது எனக்குத் தெரியும்! இந்த விஷயத்தில் சாஸ்திரியார் என்னைப் பழிவாங்காமல் விட்டது வரைக்கும் அவர்க்கு எனது நன்றி!

பிறகென்ன! அம்சாவை அடியோடு மறந்துவிட்டேன். அம்சாவை மட்டுமென்ன, பெண்ணுலகையே திரும்பிப் பார்ப்பதில்லை. ஆனால் அம்மைநாதர் மட்டும் என் ஞாபகத்திலேயே இன்னும் இருந்து வருகிறார். அவரைத்தான் மறக்க முடியுமா?

வணக்கம்,

வழிப்போக்கன்.



வழக்கறிஞர் பேசுகிறார்

—கோவை. இளஞ்சேரன்—

கோர்ட்டார் அறிவிப்பு:- கீழ்க்கோர்ட்டிலே தண்டனை பெற்ற குற்றவாளி அலமேலுவின் வழக்கு இன்று மேல் விசாரணைக்கு எடுக்கப் படுகிறது.

சர்க்கார் வழக்கறிஞர்: ஏ. குன்னிராமன்

எதிரி வழக்கறிஞர்: டி. என். கர்சன்

எ. வ. கர்சன்: என் கட்சிக்காரி அலமேலு கீழ்க்கோர்ட்டாரால் இரு குற்றங்களுக்காக ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் மூன்றாவது குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனையும் தரப்பட்டவள். அதை மறுத்து அவள் குற்றவாளி அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கோர்ட்டார்: அதற்குரிய ஆதாரங்கள்.

கர்சன்: உண்டு; அதற்கு முன்னர் என் கட்சிக்காரியது கீழ்க்கோர்ட் வாக்குமூலத்தைப் படிக்குமாறு கோர்ட்டாரவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

(படிக்கப்படுகிறது)

"என் வாழ்வைக் குலைத்து சொகுசான உடலைச் சொறி பிடித்த உடலாக்கி மேலும் கொடுமைப் படுத்தி வந்த காரணத்திற்காக மனம் பொறுமல் வேண்டுமென்றே என் கணவன் சிங்கமுத்தைத் தூங்கும் போது உலக்கையால் ஒரே யடியா யடித்துக் கொலை செய்தேன். அத்துடன் என் உயிருக்குத் தடங்கலாயிருந்த என் ஒரு மாதக் குழந்தையையும் கழுத்தை நெறித்துக் கொன்றேன். முடிவில் உயிரை வெறுத்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றேன். இந்த என் வாக்குமூலம் உள்ள நிறைவாய்ச் சொல்லப்படு உண்மை. கோர்ட்டாரவர்கள் இந்தக் குற்றங்களுக்கா என்னைத் தூக்கு மேடையே றுவார்களாயின் நான் மகிழ்ச் யடைவேன். நன்றி காட்டவு கடமைப்பட்டவளாவேன்"

ச. வ. குன்னிராமன்: இந்த வாக்குமூலத்திற்கும், நிகழ்த்திய புலன்-பிண விசாரணைக்கும் ஒத்திருந்ததால் கீழ்க்கோர்ட்டார் முன்கண்ட தீர்ப்பளித்துள்ளனர். தற்கொலை முயற்சிக் குற்றத்திற்கு இரண்டாண்டுகளும குழந்தைக் கொலைக்காக நான்காண்டுகளும் கணவன் கொலைக்குத் தூக்குத் தண்டனையும் தரப்பட்டுள்ளன.

கர்சன்: இந்த வாக்குமூலத்தின்படி தண்டனை நேர்மையானதுதான்.

குன்னிராமன்: வாக்குமூலத்தின்படிமட்டுமல்ல விசாரணையின்படியும் நேர்மையானதுதான்.

கர்சன்: இல்லை. அதுதான் என் கட்சி. விளக்குகிறேன். வாக்குமூலத்திலே உண்மை இல்லை. அதைத் தெளிவுபடுத்துவதே நான் என் கட்சிக்காரிக்காகப் பேசுவதாகும்.

கோர்ட்டார்: சரி, விளக்கலாம்.

கர்சன்: சிக்கலான இந்த வழக்கு விவரமாகக் கூறப்பட வேண்டியது. ஆகவே கோர்ட்டாரவர்கள் அன்பு கூர்ந்து பொறுமையுடனும் கூர்மையுடனும்நோக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சிறிது விளக்கமாகவே கூற வேண்டியதால் கோர்ட்டாரவர்களின் அனுமதிக்கும் வேண்டிக்கொள்கிறேன்


கோர்ட்டார்: கூறலாம்.

கர்சன்: வேலாயி நடமாட்டமுள்ள கிழவி. சுப்பையா முதலியார் வீட்டு வேலைக்காரி. அவள் மகள் அலமேலு சிறுமி.

குன்னிராமன்: வழக்கறிஞர் சிறுகதை எழுத்தாளராக மாறுகிறாரோ!

(சிரிப்பு)

கர்சன்: சிறுகதை மட்டுமல்ல பெருங்கதைகூட. சுவையானதுதான். கிழவி வேலாயி தனவருவாயில் தன் மகளைப் பள்ளிக்கனுப்பவும் செய்தாள். ஏழாவது வகுப்பு வரை படிப்பு நீண்டுவந்தது. அவள் பாடப் புத்தகத்திலே எழுதப்பட்டிருந்த



அல்ர்மேலு மங்கை என்ற எழுத்துக்களே அவளது கல்வி ஆர்வத்தைக் காட்டின. அலர்மேலு மங்கையை அலமேலாக்கி அதையும் அலமு வாக வெட்டி மேலும் அம்புலு என்று திரித்து வழங்கும் நாட்டில் அவள் எழுதினாள் அலர்மேலு மங்கையென்று. ஆனாலும் படிப்புத் தொடரவில்லை. எதிர்பாராத விதமாய்க் கிழவிக்குக் கண்ணிலே நோய்கண்டு அவள் கண்பார்வையும் இழக்க நேர்ந்தது. ஏழைதானே! கவனிப்பாரில்லை! அலமேலுவின் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. ஏழைகளுக்குப் படிப்பு பரம்பரைச் சொத்தா என்ன? இடையே வந்து பறிபோகும் பருவக் காற்றுத்தானே. ஆனல் படிப்பு முடிந்ததும் வேலைக்காக அலையும் பட்டம்பெற்ற கலைஞர்களைப் போன்று அவள அலையவில்லை. உடனே தாயின் இடம் காத்திருந்தது. ஆம். முதலியார் வீட்டில் வீட்டுக் குட்டி. கிழவிக்கு வாரிசு தானே! பட்டம் சூட்டப்பட்டாள். பதினறு வயதுச் சிறுமி?—இல்லை மங்கை. வானத்து வானம்பாடியாக் மகிழவேண்டியகாலம். வீட்டிலே கூட்டுக் குட்டியானள். முதலியாருக்கு வெட்டி துவைப்பது. அண்ணியின் சமையலுக்கு உதவி செய்வது. வீட்டைப் பெருக்குவது, கல்லூரி முடித்துப் பட்டம் பெற்று வந்துள்ள சின்ன முதலியார்—திருநாவுக்கரசுக்கு - அவ்வப்போது சிறுவேலைகள் செய்வது. இது அவளின் வேலைப்பட்டியல்.

கோர்ட்டார்: அதிகம் நீட்டாது குறிப்பாகக் கூறினல் போதும.

கர்சன்: மன்னிக்க வேண்டும். சிலநாட்களிலே கிழவி இறந்தாள். அதனுல் கவலை இருப்பினும் உடற்கட்டோ இளமை வளமோ குறையவில்லை மங்கைக்கு, அவள் அழகிதான்; அணிகளின் மினுக்காலல்ல; உடலமைப்பால் அழகி. கையிலே கண்ணுடி வளையல். காலிலேவிரலும் விரலிலே நகமும் நகத்திலே மறைந்து போனமருதானிச் செம்புள்ளிகளும், நெருங்கிச் சுருண்டு நீண்ட கூந்தலுந்தான் அவளது அழகின் அணிகள். கணுக்கால் தெரியக் கட்டிய பாவாடை; விம்மிய உடலை விடாது இறுக்கியுள்ள மேல் ரவிக்கை; பழைய - கிழிந்த தாவணி. ஆம். அந்தக் கிழிந்த தாவணி - தாவணியின் கிழிசல் தான் கல்லூரி கண்ட செல்வப் பிள்ளைக்கு திருநாவுக்கரசுக்கு — காதலை இல்லை — ஆசையைக் கிளறி விட்டது.

குன்னிராமன்: தொடர்பில்லாத வர்ணனைகள் வழக்குக்கு மாறுபடுவதை — புறம்பான தென்பதைக் கோர்ட்டாரவர்கட்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

கோர்ட்டார்: கூறட்டும்.......... மேலே.

கர்சன்: அந்த ஆசை தாயார் கடிந்துகொள்ளும் போது சலுகையாகத் தூது சென்றது. அம்மா சமையற் கட்டிலுள்ளபோது அல

மேலுவின் உழைப்பைப்பற்றிய இரக்கமாக உருவெடுத்தது. பக்கத்து வீட்டிற்குத் தாயார் போயிருக்கும்போது அதே ஆசை அலமேலுவின் அழகைச்சுட்டிக்காட்டி ஏங்கியது. படிப்படியாக அவள் தலைக்கு மலர் வருவதும், தின்பண்டங்களில் பங்கு பெறுவதும் உடைகள் மாறுவதுமாக அந்த ஆசை அரசு செலுத்தியது. இந்த வாடும் மலரும், மறையும் சுவையும் அழுக்கேறும் துணியும் ஒத்துழைத்து அலமேலுவைக் கல்லூரிக் காளையிடம் கண்ணோட்டம் செலுத்தச் செய்தன. கண்ணோட்டம் சிந்தனையோட்டத்திற்கு வந்து சிந்தனையோட்டம் காதலோட்டமாக மாறிக் காதலோட்டம் கனித்தோட்டத்திலும் புகுந்துவிட்டது.

குன்னிராமன்: (குறுக்கு விசாரணைக்கு எழுகிறார்)

கோர்ட்டார்: இந்த நேரத்தில் குறுக்கே விழாதீர்.

(கூண்டிலே அலமேலு அசையாது இமையாது சாய்ந்து நிற்கிறாள்)

கோர்ட்டார்: தொடர்கதையைத் தொடரலாம்.

கர்சன்: இரவிலே கீழறையிலே முதலியார் - அண்ணி. மேலறையிலே பையன். தெருத் திண்ணையிலே குட்டி அலமேலு. திண்ணைக்கு வரும்போதுதான் அவள் வேலைக்காரி. நடு இரவிலே அவள் வீட்டுக்காரி. பகலிலே குட்டி, இரவிலே நாட்டுப் பெண். அண்ணி கொடுத்தது திண்ணை. பையன்கொடுத்தது பஞ்சணை. ஆம். அந்த வானம்பாடிகள் ......ஆமாம் ......சிறகடிக்காது......மிதந்தன. இந்தப் பள்ளியறைப் படலம் ஐந்துமாதங்கள் நடந்தது. எத்தனை நாளைக்கு இலவு காயாகவே இருக்கும்? என்றைக்காவது முற்றிக் காய்ந்து வெடிக்கவேண்டியதுதானே. அதுபோல் இந்த இலவு தாய் தந்தையிடம் வெடித்தது. முதலியார் பணப் பெட்டியில் பழையவர். வஞ்சக எண்ணமும், ஏழைகளை இச்சுக்கொட்டி ஏளனப்படுத்தும திட்டமுந்தான் பணத்தோடு தழுவிக்கொண்டு கிடக்குமே. இவைகளின் துணைகொண்டு நுண்ணறிவுடன் அலமேலுவைத் தன்மருமகளை-வீட்டுத் தோட்டக்காரனுக்குப் பெண்டாக்கினார் முதலியார். ஏகாம்பரநாதர்சந்நிதியிலேஏ நிற்று அலமேலுவின் கழுத்திலே பொன்தாலி, உடனே நகரின் மற்றொருமூலைக்குமணமக்கள் புதுக்குடித்தனம்சென்றனர். அவனிடமிருந்து - காளையிடமிருந்து கன்னிகழிந்தவளைப் பிரித்தார் முதலியார். ஆனாலும் அவனதுசின்னம் அவள் வயிற்றிலே வளர்வது பிரிக்கப்படவில்லை. தன் மதிப்பு காப்பாற்றப்பட்டதிலே முதலியாருக்கு மகிழ்ச்சி. தன் திறனையும் உள்ளூற வியந்தார். ஆனால் இளம்பெண் மேகநோய் கொண்ட தோட்டக்காரனிடம் பிணைக்கப்பட்டுவதிலே கவலையோ கலக்கமோ - ஏன் - சிந்தனைகூட இடம் பெறவில்லை. ஏழைதானே! வளமானமரம் துண்டாக்கப்பட்டு வளரும் நெருப்பிடம் அடைக்கலமாக்கப்பட்பட்டது.

கோர்ட்டார்: இலக்கியச் சொற் பொழிவைக் குறைத்துக் கொள்ளவும்.

கர்சன்: மன்னிக்கவும்......... அலமேலுவின் வயிற்றிலே மூன்று மாதக் குழந்தை வளரத் தொடங்கியது. அத்தோடு அவள் உடலிலும் சிங்கமுத்துவின் சேர்க்கையால் பெற்ற நீர்நோய் வளரத் தொடங்கியது. நான்கு ஐந்து......எட்டு மாதங்கள் ஓடின. மாதம் ஓடஓடச் சிங்கமுத்துவின் ஐயம் பெருகத் தொடங்கியது. அந்த நாத்திகன் அறியவில்லை ஏகாமபரநாதர் ஏழாம்மாதத்திலேயே தனக்குத் தந்தைப் பதவி அருளியதை. பிறந்த குழந்தை அவன் ஐயத்திற்கு நல்ல முத்திரை கொடுத்தது. பிறந்த குழந்தையை வெறுப்புடன் பார்த்தான். பெற்ற தாயை முகஞ்சிவக்கப் பார்த்தான். சீழ்வடியும் அவள் உடலம் அவனுக்கு இரக்கத்தையல்ல எரிச்சலைத்தான் தந்தது. விம்மினான். உள்ளம் வெடித்து விடும்போலிருந்தது. துடித்துச் சீறினான். அடித்துக் கேட்டான். "ஆம்" என்றாள். "அப்படியா! ஆசை நாயகனுக்கு ஆகாய வழியைக் காட்டுகிறேன்" என்றான். "அதற்கு முன்னர் எனக்கு அதைக் காட்டு" என்றாள். "இரண்டேநாளில் காதலர்கள் கால் மடக்காது செல்லலாம்" என்றான். இருந்தாலும் அலமேலுவின் பழைய ஆசை வேகம் அதை ஒப்பவில்லை. அன்றுபொழுது போகும் நேரத்தில் சென்று தெரிவித்தாள் செல்லக்காதலனுக்கு. "கொலைசெய்ய வலைபோட்டு விட்டான்; தலையை காப்பாற்றிக்கொள். இந்த என் அபாய அறிவிப்பு அன்பின் அடிப்படையில் எழுந்தது" எனக் கூறித் திரும்பினாள்.

சின்ன அய்யாவின் சிந்தை அலைந்தது. உடல் உதறலெடுத்தது. கண்கள் விண்ணையும் மண்ணையும் மாறி மாறிச் சுட்டன. பட்டம்பெற்ற இளைஞன் இரவெல்லாம் திட்டமிட்டான். திட்டம் உருவாகும் கட்டத்திலும் வந்துவிட்டது. உறுதியையும் ஊக்கத்தையையும் பக்கத் துணையாக்கிக் கொண்டான். உதித்த திட்டம் அவனை உந்தித் தள்ளி அலமேலுவின் குடிசையின் முன் நிறுத்தியது. இரவு இரண்டு மணி. இருண்ட வானத்தின் கீழே மருண்டவாறே நின்றான். வெறியுடன் விழித்திருந்த சிங்கமுத்து தற்போதுதான் தூக்கத்தில்மூழ்கியிருந்தான்.

மூலையில் குழந்தை; பக்கத்தில் சொரிந்துகொண்டே அலுத்த கையுடன் முடங்கிக் கிடந்தாள் அலமேலு. கதவு தட்டும் ஓசைக்குக் காத்திருந்த காதுகள் கால்களைத் தூண்டின. பூனையாக நடந்தாள். முன்பும் நடந்ததுண்டு. அது இன்பமாளிகைப் பயணம். இந்த நடை துன்பக் குழிக்கு இறக்கம்.

கதவைத் திறந்தாள்; மூலையில் இருந்த உலக்கையைச் சுட்டிக்காட்டினாள்; அவள் வேறொரு மூலையில் முடங்கிக் கொண்டாள், உலக்கை இளைஞன் கையாயுதமாயிற்று.

சிறிதுநேரம் வெறிபொதிந்த அமைதி. அமைதியைக் கெல்லி அசைத்தது ஒரு பெருமூச்சு. பெருமூச்சோடு உயர்ந்த உலக்கை தாங்கிய கை பெருமூச்சின் நொடி இறக்கத்தோடு விழுந்தது. சதார்......ர்ற்ற்...க்ற்ற்......... அவ்வளவுதான் குருதி வெள்ளம். சிங்கமுத்துவின் உடல் உருண்டது அடுத்த நொடி. "வீல்......"- என்ற ஒலி. குழந்தை புரண்டது. தன் முகத்தின் புகைப் படத்தைக் கிழித்தெறிந்தான் கட்டினேன். கல்லாக நின்றுள் சிறிது நேரம். உணர்வில்லாமலே நடந்துவிட்டாள். வெளியே. குடிசையில் இருளும் அமைதியும் தழுவிக் கொண்டன.

கோர்ட்டார்: அடுத்த அத்தியாயம்.

கர்சன்:- உங்கள் விசாரணை அத்தியாயத் தொடக்கம் தான்.

கோர்ட்டார்:- குறுக்கு விசாரணை உண்டா?

குன்னிராமன்:- உண்டு. கொலைகாரக் குற்றவாளி யாரோ?

கோர்ட்டார்:- அது அடுத்த வழக்குக்கான கேள்வி. இந்த வழக்கு பற்றிய விசாரணை உண்டா?

குன்னிராமன்:- தற்போது கூண்டுக் குற்றவாளியின் வாக்குமூலம்.

கோர்ட்டார்:- என்ன அம்மா அலமேலு......

அலமேலு:- (ஊசலாடும் குரல்; ஆனால் உணர்ச்சி அதில் தலைநீட்டியது) குறுக்கு விசாரணையின் இரு கேள்விகட்கும் என் இந்த வாக்குமூலமே பதிலாகத் தருகின்றேன். நான் - அலமேலு சொல்லவேண்டியவைகள் அவரால் என் வழக்கறிஞரால் கூறப்பட்டன. நான் சொல்ல வேண்டுவதை, இவைகளை எல்லாம் செய்த என் வழக்கறிஞரே கூற முன்வந்த போது எனது நீண்ட வாக்குமூலத்திற்கு இடமில்லாது போய் விட்டது.

கோர்ட்டார்:- என்ன......?என்ன ......? செய்தவர் யார்?

அலமேலு:- செய்தவரா? கொலைகாரர்தானே! அன்று என்னை அணைத்த ஆசைக் காதலர் கொன்ற கைகளுடன்-ஆனால் அதை மறைக்க அதே கைகளால் சட்ட நூற்களைப் புரட்டாமல் உண்மை வரலாற்றைத் திருப்பிப் படித்த அவர்தான் என் வழக்கறிஞர். அதோ நிற்பவர். கொலைகாரக் குற்றவாளி, அன்று என் காதலர் திருநாவுக்கரசர். இன்று என் வழக்கறிஞர் டி. என். கர்சன். நிலைமாற்றத்திற்குத் தகுந்த பெயர் மாற்றம். தமிழ்ப் பெயரை ஆங்கிலத்தில் புடம்போட்டு நிற்கும் அவரே கொலைக்காரக் குற்றவாளி. திருநாவுக்கரசன்—டி. என். கர்சன்!

கர்சன்:- ஆம்! நான்தான்! சட்டக் கல்லூரியிலே பட்டம் பெற்று, அலமேலுவை அலைக்கழித்து, அறமன்றத்திலே பயிற்சியடைந்து, முதல் வழக்கையேந்தி, வழக்கறிஞனாக நிற்கும்நான்தான். இது என் பயிற்சியின் ஒத்திகை, பட்டத்தின் முதல் வழக்கு. நான்கொண்ட

முதல் வழக்கு. ஆனல்முதல் வழக்கே இறுதி வழக்காக வும் ஆனது.

கோர்ட்டார்:- எதிர்பாராத—கொடூரமான—முடிவு மயக் கம் தரும் நிகழ்ச்சி.

அலமேலு:— அத்துடன் உண் மையான நிகழ்ச்சி என்பதை யும் சேர்த்துக் கொள்ளுங் கள். மேலும் கூறப்போனல் ஒரு புரட்சிகரமான நிகழ்ச்சி யிலே முதல் வெற்றியுங்கூட. பெரியோர்களே! கோர்ட்டா ரவர்களே! ஏழைமீது அன்பு கூர்ந்து உயிர்ப் பிச்சையும் விடுதலையுந் தந்து என் முயற்சிக்கு நல்லதொரு அமைதி தருமாறு மன்ருடு கின்றேன்.

துன்வீராமன்:- ஒரு ஐயம். எதிரி வழக்கறிஞர் கூறிய உண்மைகள் ஒரு புறமிருக் கட்டும். கீழ்க் கோர்ட்டிலே தன்மேல் குற்றத்தை ஏற் றுக் கொண்டு தூக்குத் தண்டனையை விரும்பிய குற்றவாளி—இல்லை—எதிரி இன்று உயிருக்கு வாதாடி மேல்வழக்கு தொடரக் கார ணம்?

கோர்ட்டார்:- அவசியம் மற்ற கேள்வி.

கர்சன்:- உயிர்மேல் வெறுப் பும் விரும்பும் உண்டாவ தற்கு அவ்வப்போதைய சூழ்நிலையே காரணம். முன் னர் வழக்கு நடந்த காலத் தில் அவளது சூழ்நிலை......

(அலமேலு குறுக்கிட்டு)

அலமேலு:- அதை நானே கூறவிரும்புகிறேன். கோர்ட் டார் அனுமதியைக் கோரு கிறேன்.

கோர்ட்டார்:- (கலந்து பேசிய பின்) எதிரி வழக்கறிஞர் விரும்பினல் கூறலாம்.

கர்சன்:- அவள் கூறுவதை நான் தடைசெய்ய விரும்ப வில்லை.

அலமேலு:- என் உயிர்மேல் வெறுப்பு உண்டாயிருந்த போது, நான் ஒரு கோழை. இப்போது நான ஒரு முன் னேற்றக்காரியாக மாறி யிருக்கிறேன். அப்போது எனது உள்ளம் தாழ்ந்த மனப்பான்மையைக் கொண் டிருந்தது. "ஐயோ இவ் வாறு துன்புறுவதைக் காட் டிலும் இறபபதே மேல்" என்ற எண்ணமே அப் போது தலைதூக்கிய தல்லா மல் "நாம் துன்புறக் காரண மாக இருந்தவர் யார் (?)" என்ற சிந்தனை எழவில்லை. என் வழக்கறிஞர் மாஜி -காதலர்— "தான் கொலை காரன்" என்ற எண்ணம் தன்னை வாட்டியதால் அதை ஓரளவு தணிக்கும் வாய்ப்பு என்னைச் சந்திப்பதால் ஏற் படலாம் என்றெண்ணிச் சிறையிலே என்னைச் சந்தித் தார். அவரைக் கண்டதும் நான் வெதும்பினேன். விம் மினேன், வெறுத்து நோக் கினேன். அதனல் பழிவாங் கும் எண்ணமே கொண் டேன். "நான் எதற்கும் தயாராயுள்ளேன்" என்ருர். "என் கட்சிக்காக நீயே வழக்கறிஞனக வா" என் றேன் ஒத்துக்கொண்டார்.

நான் வென்றேன். என் போன்ற ஆண்களை நம்பிச் சீரழியும் ஏழைக் கோழைகளுக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாகத் தோன்றட்டுமென்றே அவரைக் காட்டிக் கொடுத்தேன். என் உள்ளநிலைப்படி நான் வென்றேன். என் உள்ள வெற்றியை உலகோரும் அறியக் கோர்ட்டாரின் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். ஏழ்மை உலகுக்குத் தீர்ப்பு கூறுங்கள்.

கோர்ட்டார்: வழக்குபற்றிச் சர்க்கார் வழக்கறிஞரின் தற்போதையவாதம் என்ன?

குன்னிராமன்: சிங்கமுத்துவையின் கொலைக் குற்றத்தை உண்மை நிகழ்ச்சியுடன் கொலை செய்ததாக அவரே ஒத்துக் கொண்டாலும் எதிரியாகிய அலமேலுவின் குற்றம் நீங்கியதாகக் கூறுவதற்கில்லை. குற்றம் குறைந்திருக்கிறதென்றே கருதுகின்றேன். கொலைகாரி அலமேலு சதிகாரி அலமேலுவாகக் குற்றஞ்சாட்ட ஏதுவாகிறாள். சிங்கமுத்துவின் கொலைக்குத் தூண்டுதலாகவும், ஒத்துழைப்பாகவும் குழந்தை கொலைக்குத் தடையில்லாதும் இருந்தால் அலமேலுவின்மேல் சதிக் குற்றம் ஏற்படுகிறது. ஆகவே கோர்ட்டார் வழக்கைத் திருத்தித் தீர்ப்புக் கூறும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். அதனால் இந்த வழக்கு உருமாறித் தொடர்ந்து நடக்கவேண்டுமென விரும்புகிறேன்.

(கர்சன் மயங்கி வீழ்கிருர். அரைமணி கடந்தது. உள்ளே சென்ற நீதிபதி வெளி வந்தார். தீர்ப்பு படிக்கப்படு கிறது)

தீர்ப்பு: கடந்த மூன்று மாதங்களாகக் கீழ்க்கோர்ட்டிலேயே நடத்துவந்து மேலும் இந்தக் கோர்டுக்கு மாற்றப்பட்ட இந்தப் புதுமை வழக்குக் கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி அலமேலு ஆசைகாட்டி வஞ்சிக்கப்பட்டவள், மேலும் நோயாளியிடம் அடைக்கலப்படுத்தப்பட்டவள். துன்பத்தின்மேல் துன்பம்தொடரும்போது நலிந்துபோன உள்ளம் எதையும் செய்யத் தூண்டுவது இயற்கை. அதிலும் பெண். ஏதும் புரிந்து செய்ய முடியாத அன்றைய நிலையிலே அவள் செய்தது சதியாகத் தோன்றிலும் அவளது உள்ள நலிவையும் ஏழ்மையில் உழன்று வஞ்சிக்கப்படும் நிலையையும் நோக்கும்போது அலமேலு செய்தது பெருந்தவறென்ருே குற்றமுடையதென்ருேகொள்வதற்கில்லை. அதற்கென்றுஅதுதான் சரி என்று ஒப்புக்கொள்வதற்குமில்லை. இந்த இரு நிலையையும் ஆழ்ந்து சிந்தித்து அவள் சதிக்குற்றத்திற்கு ஆளாக்கப்படுதல் சரியல்ல என்று தீர்ப்பிடுகிருேம். ஆதலால் அலமேலு குற்றமற்றவளாகக் கருதப்படுவதால்-நேர்முகக் குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதால் அவள் விடுதலை செய்யப்படுகிருள். இந்த வழக்குத் தொடர்ந்து நடைபெறும். குற்றவாளியாக டி. என். கர்சன்என்னும் திருநாவுக்கரசன் பதிவாகிருர்.

அலமேலு: கோர்ட்டாவர்களுக்கு என் நன்றி. எனது ஏழ்மை வர்க்கத்திற்கு ஒரு பெரும் வெற்றியைத் தந்துவிட்டேன். கணக்கிலடங்காத கன்னியர்கள் வஞ்சிக்கப்பட்டு ஏழ்மையொன்றின் காரணமாகவே மீண்டும் தலை தூக்க முடியாது மடிந்திருக்கின்றனர். பணப் பெட்டியின் துணைகொண்டு எத்தனையோ கன்னியர் கற்பை ஏப்பம் விட்டிருக்கிறது பணக்கார வர்க்கம். இந்த என் நிகழ்ச்சி நல்லதொரு எடுத்துக்காட்டு. முதல் முதல் ஏழை இனத்திற்கு இது ஒரு வெற்றி. என் உலகிற்கே முதல் வெற்றி. இதைப் பறையறைந்த கோர்ட்டாருக்கு என்நன்றி. இந்த என் வெற்றிக்கும் பழிவாங்குதற்கும் ஒத்துழைத்த என் வழக்கறிஞர் கர்சனுக்கு என் நன்றி. இனி நான் எதையும் விரும்பும் நிலையிலில்லை.
(வெளியேறிஞள் அலமேலு.)

தள்ளாடித் தள்ளாடி நடந்து கோர்ட் வாயிற்படியைத் தாண்டிஞள். தடுக்கி. விழுந்து விட்டாள். விழுந்தவள் எழுந்திருக்கவில்லை. எழுந்திருக்க முயற்சிக்கவுமில்லை. முயற்சித்தாலும் முடிந்திருக்காது. "இருக்கிறேன்" என்று சொன்ஞலும் அந்த உயிர் இனி அவளுக்குத் தேவையில்லை. அவள் அமைதியை முன்பே கண்டுவிட்டாள்.



மேற்றிசைக்குத் தங்கமுலாம் பூசிவிட்டு
விரைந்தோடும் செங்கதிரும்; கிழக்குவானைத்
தேற்றிவரும் முழுநிலவு; மீன்கள் கூட்டம்
தீப்பொறிபோல் மின்னிவரும்; அழகையெல்லாம்
ஊற்றிவைத்து நாம்களிக்க இயற்கைநல்லாள்
உயர்வானில் அமைந்தஒரு அழகுப்பூங்கா
நாற்றிசையும் கவியுள்ளம் நோக்கநோக்க
நல்லின்பம் தருகின்ற இரவுக் காட்சி!

சாந்தக்குடி கொண்டதுபோல் சத்தமின்றிச்
சாலையுள்ள மரங்களெலாம் தூங்கிநிற்கும்.
மாந்தர்களும் விழிதுயில, வீதியெங்கும்
மண்டிநிற்கும் அமைதியினை என்னசொல்வேன்!
தீந்தமிழின் இசைபாடிப் பொதிகைவிட்டுத்
தென்றல்வரும்; இன்பத்தைப் பூசிச்செல்லும்
காந்தமென என்னுளத்தை ஈர்க்கும் அந்தக்
கவினிரவின் ஆட்சிஉயிர்க் காட்சி என்பேன்.

காதல் இரவு

கருமையிலும் நல்லழகு காட்டுகின்ற
கவினிரவே! ஏழையரின் வாழ்வே! உன்றன்
உருவமதை இவ்வுலகு முழுதும் கண்டேன்
ஒளிமுகத்தைக் காண்பதற்கும் ஆசைகொண்டேன்
பெருவானில் சிறகடித்துப் பறந்தேன். அந்தப்
பெருவெளியின் எவ்விடத்தும் காணேன். நல்ல
திருமுகத்தைக் கறுப்பென்ற காரணத்தால்
திரையிட்டு மற்றத்தாயோ நாணத்தாலே!

பூங்காவில் நானிருந்தேன்- மாலை என்னும்
போக்கிரிப்பெண் ஏய்த்துவிட்டுப் போனதாலே
தூங்காமல் இருவிழியும் நீரைத் தேக்கிச்
சுகம்எங்கே? எங்கேயென் றலற, நீயோ
ஏங்காதே எனத்தேற்றி அணைத்துக்கொண்டாய்
எழிலிரவே! மனச்சாந்தி பெற்றேன். உள்ளம்
தாங்காத காதலினை உன்மேல் வைத்தேன்
தனிமையிலே எனக்கின்பம் தந்தாய்; வாழி!

கழியும் இரவு

நெடுந்தூரம் தெரியுமட்டும் போய்ப்பா ரென்றேன்
நீள்விழிகள் பார்வையினைச் செலுத்த, எங்கும்
கொடுமைகளே நிறைந்ததுபோல் மையிருட்டு!
கும்மிருட்டுக் கிடையேயும் ஒளியின் பாய்ச்சல்
விடுதலைக்கே போராடும் வீரன்விட்ட
வேலினைப்போல் மின்னுகின்ற மின்னற் காட்சி!
நடுநடுவே புரட்சிஎனக் கூவிச்செல்லும்
நள்ளிரவுப் புள்ளினங்கள் யாவும்கண்டேன்.

கொடியவனின் ஆட்சியிலே துன்பமுற்றுக்
கொதிப்புற்ற நெஞ்சம்போல் துடிக்கும் மீன்கள்.
மிடியிரவை அணுஅணுவாய் நாழிகைகள்
விரட்டிவரும்! விழித்திடுவீர் மக்காள் என்றே
அடிக்குரலில் களிப்பேற்றிக் கூவும்கோழி!
அதேநேரம் கீழ்த்திசையில் பரிதிவீரன்
'பிடிஅந்த, இருட்டை' என எட்டிப் பார்ப்பான்
பின்னோக்கிப் பார்த்திடிலோ இருளைக் காணோம்.

புதுப் பாஸ்டிலி

தமிழ்மணி

1744! பிரெஞ்சு மன்னன் பதினைந்தாம் லூயி நாட்டின் தந்தையாகப் போற்றப்பட்டான். அரனுக்கடுத்தபடி அரசனைப் போற்றி மகிழ்ந்தனர், அந்நாளில் பிரெஞ்சு மக்கள். மன்னன் நோய்வாய்ப்பட்டான். பாரிஸ் தெருக்களிலே பலத்த பரபரப்பு! எத்திக்கு நோக்கினும் இதே பேச்சு! தேவாலயங்களிலே இடைவிடாத பிரார்த்தனை! அந்த ஒரு ஆண்டிலே பைபிள் அதிகமாக விற்பனையாயிற்று. மன்னன் நோயிலிருந்து மீளும் நேரத்தை ஒவ்வொரு பிரெஞ்சுக் குடிமகனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். "மணியோசை பலமாகக் கேட்கிறது. மன்னனும் மடியவில்லை" மறுபடியும் கோமகனின் கோலாகலக் குதூகல வாழ்விலே மேலும் முப்பது ஆண்டுகள் ஓடிமறைந்தன. அதே மன்னன் இன்றளவும் அரியணையிலுள்ளான். அதே மக்கள் அவனடியில்! ஆனால்............!

1774! பாரிஸ் மாநகரம் அழகின் பிறப்பிடமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. நவநாகரிகக் கோச்சு வண்டிகளில் நாரீமணிகள் வெண்குடை ஏந்திய வண்ணம் செல்லும் காட்சி, தெருவின் இருமருங்கும் அடுக்கிய மாளிகைகள், அழகிய வேலைப்பாடு, கலை வளர்க்கும் நூல் நிலையம், கண்காட்சி மண்டபங்கள் மலர்ச் சோலைகள்.........எல்லாம் காலத்தின் வேகத்தை அதன் மாறுபடும் திறத்தைப் படம்பிடித்துக் காட்டின. அரசன் லூயி இப்பொழுது இரண்டாம் முறையாக மரணப் படுக்கையில் கிடக்கிறான். அரண்மனையிலே சாவின் களை பரிமளித்துக்கொண்டிருந்தது. ஆனால் முன்பிருந்த பரபரப்பு, வேதனை, உருக்கம், பிரார்த்தனை காணப்படவில்லை. மக்கள் மன்னனை அடியோடு மறந்துவிட்டனர். தேவாலயங்களிலே மக்கள் கூட்டங்கூட்டமாகக் கூடினர், இறைவனை வேண்டினர், லூயி சீக்கிரம் இறக்க வேண்டுமென்று. எந்த லூயியைத் தங்கள் சொந்தச் சொத்தாக மக்கள் கருதினர்களோ, எந்த லூயியை இறைவனின் அவதாரம் என்றெண்ணி இறும்பூதெய்தினரோ, அதே லூயியின் வாழ்வு அஸ்தமனமாக அவர்கள் வேண்டினர்.

30 ஆண்டுகள்! இடையிலே எத்தனை மாறுதல்கள்! பிரெஞ்சு மக்கள் கண்ணிழந்த கபோதிகளல்லர். கருத்திழந்த கயவர்களல்லர். பிளாண்டர்ஸ் போருக்கு, லூயி சென்றபோழ்து போர்வீரர்களுக்கு மத்தியிலே, போர்க்கருவிகளுக்கு இடையிலே போகப் பொருள்களையும் ஏற்றிச் சென்றான். வேடிக்கையூட்ட விலாசவதிகள் உடன் சென்றதைக்கூட அவர்கள் வெறுக்கவில்லை. தெய்வீக உரிமை கொண்டாடினான். அதே உரிமையை நிலைநிறுத்தி அரசனின் ஏவலுக்கு அடிபணிந்தனர். அவனிட்ட வழி செல்ல எண்ணற்ற இதயங்கள் ஏங்கிக் கிடந்தன.

முப்பதாண்டுகட்குப் பிறகும் அதே தெய்வீக உரிமைமறைந்து விடவில்லை. ஆனால் மக்களின் மனம் மாறிவிட்டது. உலகத்தின் உன்னத வேகத்திலே அவர்களும் வேகமாகமாறிவிட்டார்கள்.

லூயி சாவுப்படுக்கையிலே கிடந்து புலம்பிக்கொண்டிருக்கிறான். அவனைச் சூழ்ந்து ஓரிருவர்-அவன் மீட்சிக்காக ஏங்கி நின்றனர். நாடு முழுவதும் லூயியின் தலைமையை உதறி யெறிய ஒரு நன்னாளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது ஒரு சிலர் மட்டும் உருக்க உரையாற்றிக்கொண்டிருந்தனர். அவர்கள் வேறு யாருமல்ல, மன்னனின் மூன்றும் மனைவி சீமாட்டி டியூபாரி. அவன் அடிவருடிக் கிடக்கும் குடிகேடர்கள் மற்றும் மூவர். எதிர்கால யுகத்தைக் கூரிய விழிகளுடன் உற்று நோக்கும் எந்த இதயத்துக்கும் நொந்த லூயிமட்டுமல்ல, லூயியின் பிற்போக்கு 'மண அறுவடையால்' நாட்டின் நிகழ்காலமும் நசித்துக்கிடப்பது தெளிவாகத் தெரிந்தது. இதே நிலையை இன்று நாம் ஈரோட்டுப் பாதையிலே காணும்போது நம்முள்ளம் குமுறுகிறது.

ஈரோட்டிலே ஆயிரமாயிரம் இளைஞர்கள் கூடினார்கள். பழைய ரயில் நிலையத்திற்கும் புதிய ரயில் நிலையத்திற்கும் இடையே நீண்ட 'க்யூ'வரிசை! வேளா வேளைக்குப் போதிய உணவு அளிக்கப்படவில்லை. உத்தம புத்திரர்களாக ஊரூர்ந்து வந்த வித்தகர்கள் வீரவுரையாற்றினர். பெட்டிச்சாவி பரிமாறப்பட்டது. அந்தச் சூழ்நிலை - அன்று ஏற்பட்ட குறிப்பான நிலைமையை எவரும் மறைத்துவிட முடியாது. பெரியார் அன்று ஆரம்ப முன்னுரையாகக் கூறிய கூற்றிலே பரபரப்பு பலத்த வேகத்தில் காணப்பட்டதை எக்களிப்பில் மெய்ம்மறந்திருந்த நாம் சரியாக உணரவில்லை. அதுபற்றியே அண்ணா தனியறிக்கை, மாநாட்டு மலரிலே தீட்டினார். பெரியாரின் உள்ளத்திலே எழுந்த எதிர்கால எண்ணத்தை இது உறுதிப்படுத்துவதாயமைந்தது. பெட்டிச்சாவி தரப்பட்டது தனி மாநாட்டுக்காக, நிரந்தரமாக அவர்தான் என்று விளக்கம் தந்தார். நமக்காக அவர் தந்த தானாலும், ஒரு சில மாதங்களுக்குப்பின் நடக்க இருப்பதை முன் கூட்டியே அவர் அறிந்த அளவே தர நேர்ந்தது என்று நாம் கருதுகிறோம். பெரியாரின் பேச்சுக்கு அழகு முலாம் பூசி அதன் மூலம் புன்னகை உரிமை'யைப் பெற்ற 'காளான் கோஷ்டிக்கு' இன்று லூயியின் மரணப் படுக்கையைச் சுற்றி நிற்கும் காட்சியின் கோரத்தை நாம் மறைக்க விரும்பவில்லை.

அஞ்ஞானப் போக்கினர், தான் கொடுக்கவேண்டிய கடனுக்குப் பயந்து கொள்கையைத் தியாகம் செய்யும் காய்ந்த சருகுகள், தங்கசாலைத் தகரடப்பாக்கள், மனம் மாறுபட இங்கும் ஒரு 'பாஸ்டிலி' உடை பட்டாக வேண்டும். அந்தப் பாஸ்டிலியிலே நம் நம்பிக்கையும் தன்மானமும் தளரா உறுதியும் அடைபட்டுக் கிடக்கின்றன. இந்தப் புதுப் பாஸ்டிலி உடைபடும் நேரத்திலே பலப்பல திரைமறைவுகள், சூழ்ச்சிப்படலங்கள் விளக்கப் படுவதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடியும். பகுத்தறிவுக்கதிர் பரவவொட்டாது தடுத்து நிற்கும் பாஸ்டிலிகள் தகர்க்கப்படுமா?

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN